18வது அகவையில் 2014ற்கான
தரம் 1-11 வரையான
புதிய வகுப்புக்கள் ஆரம்பம்
ஆரம்பம் 03.01.2014
குணா கல்வி நிலையம்
இல 213, நீதிமன்ற வீதி,
திருகோணமலை
T.P 0777034908

அறைவு 02 இயம் 20 December 28, 2013 - January 03, 2013

# மலைமுரசு
MALAIMURASU
வார இதழ்
உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்

விலை : 30.00 பக்கங்கள் : 16 Registered as a newspaper in Sri Lanka பிரதி சனிதோறும் வெளியாகும் வார இதழ்

## "தமிழின நலனுக்கான தீர்மானம்"

### பாராட்டுகின்றார் மட்டு- அம்பாறை ஆயர்



"ஏமாற்றத்தை முன்கூட்டியே அறிந்து இலங்கை அரசுடன் இப்போதைக்கு பேச்சில்லை என்றும், நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பங்கேற்கமாட்டோம் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு, கிழக்கு உறுப்பினர்கள் சம்பந்தன் பாராளுமன்ற உறுப்பினரின் தலைமையில் வவுனியாவில் எடுத்த தீர்மானத்தை வரவேற்கின்றேன் என மட்டு அம்பாறை மறை மாவட்ட ஆயரான அதி. வண. ஜோசப் பொன்னையா அவர்கள் விடுத்துள்ள செய்தியில் தெரிவித்துள்ளார்.

"இந்த முடிவு தமிழினத்தின் நலனைக் கருத்தில் கொண்டு எடுக்கப்பட்டுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்..... 13

## சுனாமி அலைகளின் பின்னர் உயிர்த்த கிழக்கின் குழந்தை அபிலாஸ் ஜெயராஜ்

சுனாமியில் சிக்குண்டு உயிருடன் திரும்பி உலகப் புகழ்பெற்ற கிழக்கின் குழந்தையான அபிலாஸ் தனது தசாப்த வயதினை தற்போது அடைந்துள்ளார்.

மட்டக்களப்பு பாண்டிருப்பு பிரதேசத்தைத் தாக்கிய அலைகளில் காணாமற்போன அபிலாஸ் ஒன்றரை நாட்களின் பின்னர் மீளக் கிடைத்தாலும் சுமார் பத்து பெற்றோர் அவரைத் தமது குழந்தையென உரிமை கோரியதாலேயே பிரச்சனைகள் உருவாகின.



குழந்தையைத் தரமறுக்கும் தாயின் போர் -02.02.2005



வலுக்கட்டாயமாகப் பிரிக்கப்பட்ட குழந்தைக்கான கதறல் -02.02.2005



டி.என்.ஏ பரீட்சிப்பிற்காகக் கொழும்பில் குழந்தை 09.02.2005



52 நாட்களின் பின் அம்மாவின் அரவணைப்பில் குழந்தை 16.02.2005



அமெரிக்கத் தொலைக் காட்சியில் கிழக்கின் குழந்தை 02.03.2005

## "தமிழர்கள் தம்மைத் தாமே நம்ப வேண்டும்"

### பேராசிரியர் பொய்லி



ஈழத் தமிழர்கள் அமெரிக்காவையோ, பிரித்தானியாவையோ, ஐக்கிய நாடுகள் சபையையோ, ஐரோப்பிய ஒன்றியத்தையோ அல்லது அதன் உறுப்பு நாடுகளையோ நம்பாது தம்மீது நம்பிக்கை வைக்க வேண்டும் என போராசிரியர் பிரான்ஸிஸ் பொய்லி தெரிவித்துள்ளார்.

"பலஸ்தீனத்தின் சமாதானப் பேச்சுக்களிலும் பொஸ்னிய சமாதானப் பேச்சுக்களிலும் ஈடுபட்டுப் பெற்றுக் கொண்ட சிறந்த அனுபவத்தைக்.....

கொண்டே நான் இதனைச் சொல்கின்றேன். ஈழத் தமிழருக்குத் தேவையான, பொருத்தமான எதனையும் இந்நாடுகளோ அமைப்புக்களோ வழங்கப் போவதில்லை எனவும் அவர் அண்மையில்.... 13

## திருமலைக் கடற்படைப் பயிற்சியை நிறுத்து

### தமிழ்நாட்டின் முதல்வர்



திருகோணமலைக் கடற்படைத் தளத்தில் நிகழும் முன்நாட்டுக் கடற்படைப் பயிற்சியினை உடனே நிறுத்திக்கொள்ள வேண்டும் என இந்தியப் பிரதமருக்கு தமிழ்நாட்டின் முதல்வர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.... 13

**மலைமுரசில் அடுத்த வாரம் தொடக்கம்**

க.பொ.த. சாதாரண தரம் கணித ஆசிரியர் ரி. குமணன் அவர்களின் 1000 கணிதக் கேள்வி பதில்கள்

புலமைப் பரிசில் ஆசிரியர் ந. மனோகரனின் புலமைப் பரிசில் பரீட்சை கேள்வி பதில்கள்

பிரதிக்கு முந்துங்கள்

## கடலில் கலக்கும் நீரைத் தடுத்த விவசாயிகள்



திருகோணமலை குமரக் கடவைப் (கோமரங் கடவெல) பிரதேசத்தில் உள்ள கல்யாணபுர விவசாயிகள் இணைந்து பன்குளம் ஆற்றின் ஊடாகக்.... 13

## புலமைப் பரிசில் தடைக்கு வலுக்கும் எதிர்ப்பு



2006ம் ஆண்டில் இருந்து புலமைப் பரிசில் பரீட்சை நடைபெறாது எனக் கல்வி அமைச்சர் அறிவித்த தினத்தில் இருந்து அவ் அறிவித்தலுக்கு எதிராகக் கடும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.

இவ்வறிவிப்பைக் கடுமையாக 13




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
159A, 2வது மாடி, கடல் முக வீதி,
திருக்கோணமலை.
malaimurasu@hotmail.com
0754252042 fax: 026 2223071

## வணக்கம்

## பிரதேசசபைகளில் பட்ஜட் தோல்வி - புதிய பாடம்

ஆளும் ஐக்கிய மக்கள் முன்னணியின் கட்டுப்பாட்டில் உள்ள பல உள்ளூராட்சி சபைகளில் அடுத்தடுத்து முன்மொழியப்பட்ட பாதீடுகள் தோல்வி அடையத் தொடங்கிய போது தற்போதைய சனாதிபதி ஆட்சியின் அஸ்தமனக் குறியீடுகளாக அவை அமைகின்றனவோ என்ற கேள்வி அனைவரிடமும் எழுந்திருந்தது.

ஆனால் அதேவகையில் வடக்கில் தொடங்கி கிழக்கிலும் நீண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்டுப்பாட்டிலுள்ள உள்ளூராட்சி சபைகளின் பாதீட்டுத் தோல்வி ஒரு படிப்பினையை எமக்களித்துள்ளது.

உள்ளூராட்சி சபைகளின் தலைவர்களின் தன்னிச்சையான போக்கே பெரும்பாலான பாதீட்டுத் தோல்விகளுக்குக் காரணமாகக் கூறப்படுகின்றது.

உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள் தன்னிச்சையான போக்கில் இயங்குகின்றார்கள் என்பதை பாதீட்டுத் தோல்வியில் இருந்து தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைப் பீடம் தெரிந்து கொண்டுள்ளது என்பது இங்கு முதலாவது பாடமாக அமைகின்றது.

தமிழர் தேசியப் போரை அரசியல் முகத்துடன் முன்னெடுத்துச் செல்லும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது உள்ளக நிலையினை இடைவிடாது கண்காணிக்க வேண்டிய தேவையொன்று இருக்கினறதே என்பதே அம் முதல் பாடத்தின் விரிவாக்கம்.

பிரதேசங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பபைத் தாங்கி நிற்கும் அரசியல் தலைவர்களின் நடவடிக்கைகளை கண்காணிக்க உள்ளக ஆய்வுக் குழுவொன்றை அமைக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது. மக்களிடம் இருந்தும் கட்சி அங்கத்தவர்களிடம் இருந்தும் எந்த முறைப்பாடுகளையும் பெற்றுக்கொள்ளத் தக்கவகையில் அக்குழுவின் அசைவு இருப்பதுடன் பாரபட்சமற்ற விசாரணை, குற்றங்களுக்கு மன்னிப்பும் தண்டனையும் போன்ற விடயங்களையும் அக் குழு நிகழ்த்தக் கூடிய வகையில் அதிகாரம் பெற்றதாகவும் இருக்க வேண்டும்.

இரண்டாவது பாடம் சரியானவர்களைத் தேர்வு செய்து மக்கள் மற்றங்களுக்கு கொண்டு வருவதும் அவர்களை தேர்தலில் நிற்கவைப்பதும் மிக முக்கியமாக இருக்கின்றது. தேர்தல் காலத்தில் தேர்தலில் நிற்கவேண்டியவர்கள் யாரெனத் தேடாமல் அவர்களின் பட்டியலை சற்று முன்னரே தயார்படுத்திக் கொள்வது மிக முக்கியமானதாக இருக்கின்றது. ஆளுமைமிக்க, அன்புகொண்ட, அதிகார மமதை கொள்ளாத தமிழர்களைத் தேடி மக்கள் சேவையில் ஈடுபடுத்திப் பின் அவர்களை தேர்தலில் நிற்க வைத்துத் தலைவர்களாக்கினால் பாதீடு தோற்கும் நிலை என்றும் எழாது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிறுத்தும் ஆட்டுக்கும், நாய்க்கும் கூட நாம் வாக்குகளைப் போடத் தயாராகவே இருக்கின்றோம்... ஆனால் அது நீண்ட காலத்திற்கு நிலைக்காது என்பதைப் புரிந்துகொள்வார்களா.....?

## வெடிப்பொருளை விழுங்க முற்பட்ட யானையின் வாய் கிழிந்தது



திருகோணமலை குச்சவெளிப் பிரதேசத்தில் யானைக் குட்டியொன்று வெடிபொருளை உட்கொள்ள முனைந்தபோது காயமடைந்துள்ளது.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற இந்தச் சம்பவத்தை அடுத்துதலத்திற்குச் சென்ற கடற்படையினர் குறித்த யானைக் குட்டியை மீட்டு நிலாவெளி கடற்படை முகாமிற்கு கொண்டுசென்று, பின்னர் குறித்த யானைக் குட்டியை வனசீவராசிகள் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளனர்

## கைத்தொலைபேசியில் மிரட்டி கப்பம்



“உன்னைப் பற்றிய தகவல்களை கணவருக்கும் ஊருக்கும் தெரிவிக்கப் போகின்றேன். அதனைத் தடுக்க வேண்டுமானால் 45,000 ரூபாய் பணம் தா” என கைத்தொலைபேசியில் அழைப்பெடுத்து மிரட்டிய இளைஞனுக்குப் பிணை வழங்கப் பட்டுள்ளது. அக்கரைப்பற்று ஆலையடி வேம்பு பிரதேசத்திலேயே இவ்வாறு நிகழ்ந்துள்ளது.

இம் மிரட்டலைத் தொடர்ந்து பத்தாயிரம் ரூபாவை வங்கியூடாக மேற்குறிப்பிட்ட இளைஞன் பெற்றுக் கொள்ள முயன்ற போதே காவல்துறையால் கைது செய்யப்பட்டான். கடந்த 21ம் திகதி நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட அவ்விளைஞனை ஐம்பதாயிரம் ரூபா சரீரப் பிணையில் விடுவித்ததுடன் எதிர்வரும் 31ம் திகதி வழக்கை ஒத்திவைத்துள்ளார்.

## துடுப்பாட்டப் போட்டியில் கத்திக்குத்து

தோப்பூர் விளையாட்டுத் திடலில் துடுப்பாட்டப் போட்டி நடைபெற்ற போது நிகழ்ந்த கைகலப்பில் கத்திக் குத்துக்கு இலக்கான ஒருவர் திருமலைப் பொதுவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இச் சம்பவத்தில் தோப்பூர் அல்லைநகர் இர்பான் என்ற 22 வயதான இளைஞருக்கே இக்கதி ஏற்பட்டுள்ளது.

ஆட்டத்தை இரசிக்க வந்த பார்வையாளர்களிடையே ஏற்பட்ட முறுகலைத் தொடர்ந்து நிகழ்ந்த இக் கத்திக் குத்து தொடர்பாக ஒருவர் கைதாகியுள்ளார். மேலதிக விசாரணைகள் தொடர்கின்றன.

(ரி.கே)

## தொடருந்தில் மோதுண்டு வயோதிபர் பலி

சீனக்குடா துறைமுகப் பகுதியில் வசிக்கும் சற்று மனநிலைப் பாதிப்புக்கு உள்ளாகியிருந்த வயோதிபர் ஒருவர் தொடருந்தில் மோதுண்டு பலியாகியுள்ளார்.

கடந்த 24ம் திகதி குடிபோதையில் தொடருந்துக் கடவையைக் கடக்க முயற்சித்த போது எதிர்பாராதவிதமாக வந்த தொடருந்தினால் மோதப்பட்ட அவர் தலத்திலேயே பலியாகியுள்ளார்.

பலியானவர் 52 வயதான ஜி.பந்துசேன எனத் தெரியவருகின்றது.

(அனுர-உதய)

## கமநல தொழில்நுட்ப உத்தியோகத்தர் பொதுப் பரீட்சை

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கும் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தில் இலங்கைத் தொழில்நுட்ப சேவை அலுவலர்களுக்கான வெற்றிடங்கள் போட்டிப் பரீட்சை ஊடாக நிரப்பப்படவுள்ளன.

தொழில்நுட்ப திப்புளோமாவைப் பெற்றவர்களும் தேசிய தொழிற் தியமையின் 6வது நிலையைத் தாண்டியுள்ளவர்களும் இப் பொதுப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பக் கட்டணம் 500.00 ரூபா. முடிவுத் திகதி 27.01.2014

## செங்கலடி தனியார் நிரப்பு நிலைய டீசலில் தண்ணீர்

செங்கலடி நகரிலுள்ள தனியார் எரிபொருள் நிரப்பு நிலையமொன்றில் விற்பனை செய்யப்பட்ட எரிபொருளில் தண்ணீர் கலந்திருந்ததாக ஏறாவூர் காவல் துறையில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை டீசல் நிரப்பிய வாகனங்கள் பயணத்தைத் தொடர முடியாது இடை நடுவில் பழுதடைந்த நிலையில் வாகனத்திலுள்ள டீசலினை பரீட்சித்து பார்த்த போது தண்ணீர் கலப்படம் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.



## மட்-நாவற்குடா லூர்து அன்னை ஆலய நிகழ்வு

மட்டக்களப்பு நாவற்குடா புனித லூர்து அன்னை ஆலயத்தின் கிறிஸ்து பிறப்பின் நிகழ்வுகள் கடந்த செவ்வாய் கிழமை அருட்தந்தை. ரஜீவன் அடிகள் தலைமையில் இடம்பெற்றது. (சச்சு)

## பெண்கள் விழிப்புணர்வு

23.12.2013 திங்கட்கிழமை திருகோணமலை மகளிர் சங்க சமாசம் மற்றும் “அமரா” குடும்பத் தலைமைப் பெண்கள் அமைப்பினர் இணைந்து ஒழுங்கு செய்த மனித உரிமைகள் மற்றும் பெண்கள் எதிர் கொள்ளும் பிரச்சனைகள் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு விபுலானந்தா மகா வித்தியாலத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக கலந்து கொண்ட கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஜெ.ஜெனார்த்தனன் மற்றும் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஆர்.அன்வர் ஆகியோரிடம் பெண்கள் எதிர் நோக்கும் பிரச்சனைகளும் அவற்றிற்கு தமது அமைப்புக்களினால் முன்வைக்கபடும் தீர்வு தொடர்பான கோரிக்கைகள் அடங்கிய பட்டயத்தினையும் கையளித்தனர்.

## கல்முனை மாநகரசபைக்குள் இழுபறி

கல்முனை மாநகர சபை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களுக்குள் ஏற்பட்டிருக்கும் கருத்து முரண்பாடுகள் என்ன என அறிந்து- அந்த முரண்பாடுகளை கலைவற்கு சகல முயற்சிகளையும் மேற்கொள்ளவுள்ளேன் என பாராளுமன்ற உறுப்பினரும் கல்முனைதொகுதி அபிவிருத்திக்குழு தலைவருமான சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ் தெரிவித்தார்.

கல்முனை மாநகர சபையின் வரவு- செலவு திட்டம் சம்பந்தமாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினர்களில் சிலர் கருத்து முரண்பாடுகளுடன் செயற்பட்டமை தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## „கழிவறைக்குள் கமெரா" வைத்தியருக்குப் பணித்தடை

அலுவலர் கழிவறையில் துடைக்கும் துணி தொங்கவிடும் இடத்தில் நுண் புகைப்படக் கருவியைப் பொருத்தினார் என்ற சந்தேகத்தில் வைத்தியர் ஒருவர் பணித்தடைக்கு உள்ளாகியுள்ளார்.

அனுராதபுர வைத்தியசாலையில் நிகழந்த இக் கேவலச் சம்பவம் தொடர்பாக கருத்தறிவித்த வைத்தியசாலைப் பணிப்பாளர் கடந்த சில நாட்களுக்கு முன்னர் பொதுக் கழிப்பகத்தினுள் பொருத்தப்பட்டிருந்த நுண்புகைப்படக் கருவியொன்று கண்டு பிடிக்கப்பட்டதாகவும் அதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட தேடுதலின் போது மற்றொரு கருவி அலுவலர் கழிப்பிடத்தில் அகப்பட்டதாகவும் தெரிவித்தார்.

முழு விசாரணைகள் முடியும் மட்டும் குற்றவாளி யார் எனத் தெரிவிக்க முடியாது எனத் தெரிவித்த வைத்தியசாலைப் பணிப்பாளர், இவ்விடயம் தொடர்பாகச் சந்தேகத்தின் பேரில் வைத்தியர் ஒருவர் தற்காலிகமாகப் பணி நீக்கப் பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

## பசியால் ஆணை விழுங்கிய பெண்

தெஹிவளை விலங்குக் காட்சியகத்தில் அண்மையில் பெண் அனகொண்டா தனது தசாப்தகால ஆண்துணையை விழுங்கிய சம்பவத்திற்கு அடிப்படைக் காரணம் பசி எனத் தெரியவந்துள்ளது.

போதுமான அளவு உணவின்மையால் வாடிய பெண் பாம்பு தனது ஆண் துணையை விழுங்கி ஏப்பம் விட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொலோஸ்னிக்கோவ் ஒரு அரை நூற்றாண்டுச் சரித்திரம்

ஒரு நாட்டின் இருப்பும் பாதுகாப்பும் அதன் படை பலத்திலும், ஆயுத வளத்திலுமே முற்று முழுதாக தங்கியிருந்த காலத்தில் சோவியத்து ஒன்றியத்தை தனது அறிவு ஆற்றலால் தலைநிமிரவைத்த மிக்கையில் கலாஸ்னிகோவ் நேற்று முன்தினம் (23) காலமாகிவிட்டார்.

எனினும் கடந்த 56 வருடங்களுக்கு மேலாக உலகம் எங்கும் உச்சரிக்கப்பட்ட கலாஸ்னிகோவ் என்ற நாமம் இன்னும் பல தசாப்தங்களுக்கு மேலாக நீடிக்கும் என்பதில் ஐயமில்லை. தனது நாட்டின் பாதுகாப்புக்காக உருவாக்கப்பட்ட கலாஸ்னிகோவ் தன்னியங்கி என்ற துப்பாக்கி பல நாடுகளின் விடுதலைப் போராட்டத்தில் முக்கிய பங்கு வகித்ததுடன், பல நாடுகளின் இனஅழிப்பு மற்றும் சட்டவிரோத நடவடிக்கையிலும் முக்கிய பங்கு வகித்திருந்ததது மற்றும் பங்குவகித்தும் வருகின்றது.

ரஸ்யாவின் பெரும்பகுதியை ஜேர்மனியப் படைகள் கைப்பற்றிய நிலையில் ரஸ்யாவின் செம்படை என்னும் இராணுவம் தாக்கிவிட்டு ஓடும் அல்லது சிறு சிறு குழுக்களாக சென்று தாக்கி அழிக்கும் நிலைக்கு மாறியிருந்தது. ஏறத்தான கெரில்லா தாக்குதல் போன்ற தாக்குதலை மேற்கொள்ளும் படையினருக்கான தாக்குதல் ஆயுதம் ஒன்றை தேடி ரஸ்யா அலைந்த வேளையில் ரஸ்ய இராணுவத்தின் டாங்கி படைப்பிரிவின் பொறியியலாளராக பாணியாற்றிய காலாஸ்னிகோவ் உபஇயந்திரத் துப்பாக்கி ஒன்றின் வடிவமைப்பை 1944 ஆம் ஆண்டு ரஸ்யாவின் ஆயுதக் கண்காட்சிக்கு அனுப்பியிருந்தார்.

சமர்க்களத்தில் ஜேர்மன் படையினரின் துப்பாக்கிக் குண்டை தோள்பட்டையில் வாங்கிய நிலையில் வைத்தியசாலையில் இருந்தே தனது பணியை அவர் மேற்கொண்டிருந்தார். முன்னைய உபஇயந்திரத் துப்பாக்கியின் இயங்கு முறையில் இருந்து இந்த துப்பாக்கி வேறுபட்டதாக இருந்தது. அதாவது மிகவும் பாதுகாப்பானது.

ஏனெனில் முன்னைய தூப்பாக்கிகள் முதலாவது வெடிப்பு அதிர்வின் மூலம் கிடைக்கும் பின்உதைப்பைக் கொண்டே அடுத்த சூட்டுக்காக துப்பாக்கி



தன்னை தயார் படுத்திக்கொள்ளும், ஆனால் இந்த துப்பாக்கி படை நடவடிக்கையின் போது பல விபத்துக்களை தோற்றுவிக்கக் கூடியது.

அதற்கு மாற்றீடாகவே முதலாவது வெடிப்பின்போது உருவாக்கும் வாயுவைக் கொண்டு உருவாகும் அமுக்கத்தின் மூலம் (Gas-driven rifle) இயங்கும் துப்பாக்கியை கலாஸ்னிகோவ் கண்டுபிடித்திருந்தார். அதன் பயன்பாடு மிகவும் பாதுகாப்பானது. எனினும் 1944 ஆம் ஆண்டு அவரின் துப்பாக்கி வடிவத்தை எஸ்கேஎஸ் துப்பாக்கி வடிவம் பின்தள்ளியிருந்தது.

அதன் பின்னர் 1946 ஆம் ஆண்டு கலாஸ்னிகோவினால் சமர்ப்பிக்கப்பட்ட வடிவம் தான் தற்போதைய ஏகே-47 ரகத் துப்பாக்கி. அதன் வடிவமைப்பையும், பயன்பாட்டையும், தகமையையும் அதன் பின்னர் வந்த எந்த துப்பாக்கியாலும் பின்தள்ள முடியவில்லை.

மடித்துவிடக்கூடிய பின் உதைப்பு தாங்கி அதனை இலகுவாக் மறைத்து வைக்கும் மற்றும் காவிச்செல்லும் தகமைகளை வழங்கியிருந்தது. 32 சன்னங்களை நிரப்பும் ரவைச்சட்டம் அதிக சுடுவலுவையும், 7.62மி.மீ ரவை யானது அதிக தூர தாக்குதல் வலு மற்றும் அதிக சேதாரங்களை ஏற்படுத்தும் தகமையையும் அதற்கு வழங்கியிருந்தது.

எந்தக் காலநிலையிலும் இயங்கும் வடிவமைப்பு அதன் பயன்பாட்டை உலகம் எங்கும் பரவ வழிவகுத்திருந்தது. 1960களில் இடம்பெற்ற வியட்னாம் போரின் போது அமெரிக்க படையினரின் பிரதான ஆயுதமாக எம்-16 துப்பாக்கியும், கெரில்லாக்களின் பிரதான ஆயுதமாக ஏகே-47 ரகத் துப்பாக்கியுமே இருந்தன.

காடுகளில் இடம்பெற்ற சமரின் போது, அமெரிக்கப்படையினரின் இழப்புக்கள் அதிகமாகக் காணப்பட்டதால் இருதரப்பினரினதும், ஆயுதங்களை அமெரிக்க படை பொறியியலாளர்கள் பரிசோதித்திருந்தனர்.

கொங்கிறீற் கற்களை கவசமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட இந்த பரிசோதனையில் அமெரிக்கப் படையினரின் எம்-16 துப்பாக்கியில் இருந்து புறப்பட்ட 5.56 மி.மீ துப்பாக்கிச் சன்னம் கொங்கிறீற் கற்களை துல்லியமாக தாக்கியபோதும் அதனை கடந்து செல்லவில்லை. ஆனால் துப்பாக்கியில் இருந்து புறப்பட்ட சன்னம் கொங்கிறீற் கற்கனை இரண்டாகப் பிளந்து ஊடறுத்துச் சென்றிருந்தன.

பல சோதனைகளின் முடிவாக அமெரிக்க படை அதிகாரிகள் பின்வரும் முடிவைத் தெரிவித்திருந்தனர். அதாவது காடுகளில் இடம்பெறும் சமர்களில் சிறிய மரங்களில் பின்னால் நிலையெடுக்கும் அமெரிக்கப் படையினரை மரங்களை ஊடறுத்துச் செல்லும் ரகத் துப்பாக்கி களின் சன்னங்கள் கொன்று குவிக்கி ன்றன. அதன் பின்னர் தான் அமெரிக்க 50 கலிபர் துப்பாக்கியின் தேவையை உணர்ந்திருந்தது.

up-56 துப்பாக்கிக்கான தயாரிப்பு உபகரணங்களையும் ரஸ்யாவே சீனாவுக்கு வழங்கியிருந்தது.

கடந்த அரை நூற்றாண்டுக்கு மேலாக பயன்பாட்டில் இருந்துவரும் ஏகே-47 துப்பாக்கி மற்றும் அதன் பிரதிவடிவ துப்பாக்கிகள் என்பன ஏறத்தாள 100 மில்லியன் வரையிலும் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், உலகம் எங்கும் பயன்பாட்டிலும் உள்ளன. ரஸ்யாவின் ஆயுதவிற்பனையிலும் அது அதிக முக்கியத்துவத்தை வழங்கியிருந்தது.

தனது நாட்டின் பாதுகாப்புக்காக காலாஸ்னிகோவினால் உருவாக்கப்பட்ட ஏகே-47 ரகத் துப்பாக்கியின் வரவினால் பல நன்மைகளும், தீமைகளும் விளைந்தபோதும், அதன் கண்டுபிடிப்பானது தொழில்நுட்பத்துறையிலும், படைத்துறையிலும் மிகப்பெரும் மாற்றத்திற்கு காரணமாக அமைந்திருந்தது என்பதை நாம் மறுக்க முடியாது.

**வேல்ஸ் இருந்து அருட்ஸ்**

## தேசிய நாடக விழா 2014ம் ஆண்டிற்கான இரண்டாம் சுற்றுக்கான காட்சி

கிழக்கு மாகாண கலாச்சார உத்தியோகத்தர் உபநந்த வெலிக்கலை அவர்களின் தயாரிப்பில், மு.காளிதாஸ் அவர்களின் நெறியாள்கையில் "நாங்கள் வானத்திலிருந்து விழுந்தவர்கள் அல்ல" என்னும் நாடகம் 30.12.2013 அன்று மாலை 6.30 மணிக்கு உவர்மலை பாடசாலை கேட்போர் கூடத்தில் கலாச்சார அலுவலக அமைச்சின் தேசிய நாடகக் குழுவின் தலைமையின் கீழ் நடைபெறவுள்ளது.

இந்நாடகமானது, யுத்த காலத்தில் வீடுகளை இழந்து, உறவுகளை இழந்து, உடமைகளை இழந்து அனாதைகளாய் முகாம்களில் தங்களுடைய வாழ்க்கையை வாழ்வதற்காய் போராடிக் கொண்டிருக்கும், பற்பல துன்பங்களைச் சந்திக்கின்ற அப்பாவிகளின் கதையையே நாடக விழா 2014ம் ஆண்டிற்கான இரண்டாம் சுற்றுக்கான காட்சி

## "ரணம்" குறும்திரைப்படம் மற்றும் "ஒருமுறை அருகில்" இசை ஆல்பம் வெளியீட்டு விழா?




எமது மட்டு மண்ணின் ,கலைஞர்களை வைத்து உருவாக்கப்பட்ட "ரணம்" குறும்திரைப்படம் மற்றும் "ஒருமுறை அருகில்" இசை ஆல்பம் வெளியீட்டு விழா சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு ஆசிரியர்கள் பயிற்சி கல்லூரி மண்டபத்தில் நடைபெற உளள்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் பேச்சுக்கள் உடனடிச் சாத்தியமா?

இனப்பிரச்சினைக்கு அரசியல்தீர்வு காண்பதற்கான பேச்சுக்கள் தொடர்பாக மீண்டும் ஊடகங்களில் செய்திகள் வெளிவரத் தொடங்கியுள்ளன.

கடந்தவாரம், வரவு-செலவுத்திட்ட விவாதத்துக்கு பதிலளித்து உரையாற்றிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச, இனப்பிரச்சினைக்கு வெளிநாடுகளிடம் தீர்வைத் தேட வேண்டாம் என்றும், உள்நாட்டில் பேசித் தீர்க்க முன் வருமாறும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அழைப்பு விடுத்திருந்தார்.



இதையடுத்து, ஆக்கபூர்வமான முறையில், பேச்சு நடத்த அரசாங்கம் முன் வருமானால், அது குறித்துப் பரிசீலிக்கத் தாம் தயார் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்திருந்தார்.

இதையடுத்தே, மீண்டும் பேச்சுக்கள் தொடர்பான செய்திகள் ஊடகங்களில் இடம்பிடிக்கத் தொடங்கியுள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான பேச்சுக்கள் முறிவடைந்து கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர், மீண்டும் பேச்சுக்களுக்கான முனைப்புகள் காட்டப்படுகின்றன.

இடைப்பட்ட காலங்களில் அவ்வப்போது, பேச்சுக்கள் தொடங்கப் போவது போன்ற சூழல் உருவாவதும், அழைப்புகள் விடுக்கப்படுவதும், பின்னர் அதுவே கலைந்து போவதும் வழக்கமாகி விட்டது.

கடந்த காலங்களை விட இம்முறை பேச்சுக்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்ட சூழல் சற்று வித்தியாசமானது. ஏனென்றால், போர் முடிவுக்கு வந்த பின்னர், அரசாங்கத்துக்கு இப்போது அழுத்தங்கள் அதிகரித்து விட்டன.

குறிப்பாக, அடுத்த ஆண்டு மார்ச் மாதம் ஜெனிவாவில் ஆரம்பமாகவுள்ள ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 25ஆவது கூட்டத்தொடர், அரசாங்கத்துக்கு முக்கியமான பிரச்சினையாக மாறி வருகிறது.

இம்முறை, ஜெனிவாவில் அரசாங்கத்தை கடுமையான அழுத்தங்களுக்கு உட்படுத்தும் முயற்சியில் மேற்குலக நாடுகள் இறங்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த அழுத்தத்தை சமாளிப்பதற்கு ஏதாவதொரு உருப்படியான உதவுகோல் அரசாங்கத்துக்குத் தேவைப்படுகிறது.

2012ஆம் ஆண்டு இலங்கைக்கு எதிரான முதலாவது தீர்மானம் ஜெனிவாவில் கொண்டு வரப்படுவது உறுதியான நிலையில் கூட, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரசாங்கம் பேச்சுக்கு அழைத்தது.

அப்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், ஜனாதிபதியை சந்தித்துப் பேசினார். அதை அரசாங்கம், ஜெனிவாவில் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள முயன்றது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண தாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்தி வருவதாக, ஜெனிவாவில் அரசாங்கம் அறிக்கை சமர்ப்பித்தது.

அதுபோலவே, கடந்த ஆண்டு மார்ச் மாதம், மீண்டும் ஜெனிவாவில் அமெரிக்கா தீர்மானம் கொண்டு வரப்போவதை அறிந்ததும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அரசாங்கத்தினால் அழைப்பு விடுக்கப்பட்டது.

ஆனால், இத்தகைய பேச்சுக்களை அரசாங்கம் ஜெனிவாவில் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கிறது என்ற கருத்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் வலுப் பெற்றிருந்ததால், அரசாங்கத்தின் திட்டம் பலிக்கவில்லை.

இப்போது, ஜெனிவா கூட்டத்தொடருக்கு இன்னமும், மூன்று மாதங்களே எஞ்சியுள்ள நிலையில், மீண்டும் அரசாங்கம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அழைப்பு விடுத்துள்ளது.

ஆனால், கடந்த ஆண்டைப் போலவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இம்முறையும் கவனமாகவே நடந்து கொள்ளும் என்றே எதிர்பார்க்கலாம்.

ஏனென்றால், கடந்த காலங்களை விடவும், இந்த ஆண்டு இலங்கை அரசாங்கத்துக்கு ஜெனிவா அழுத்தம் நிறைந்த களமாக இருக்கும் என்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நன்றாகவே உணர்ந்து வைத்துள்ளது.

அரசாங்கத்தின் பேச்சுப் பொறிக்குள் சிக்கிவிடக் கூடாது என்பதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிச்சயம் உறுதியான நிலைப்பாட்டை எடுக்கும் என்றே தெரிகிறது.

அதனால், தான் ஆக்கபூர்வமான வகையில் பேசுவதானால் மட்டும் பேசுவது குறித்துப் பரிசீலிக்கலாம் என்றும் இரா.சம்பந்தன் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதியினது அழைப்பை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுத்த எடுப்பிலேயே நிராகரித்திருக்கலாம். ஆனால், அவ்வாறு செய்யாததற்கு காரணம் உள்ளது.

ஏனென்றால், தாம் பேச்சுக்கு அழைத்தோம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தான் அதற்கு ஒத்து வரவில்லை என்று இலகுவாக அரசாங்கம் தனது பொறுப்பைத் தட்டிக் கழித்து விடலாம்.

சர்வதேச அரங்கில் இதுபோன்று [illegible] இவ்வாறு நட[illegible]

எனவே, அரசாங்கத்தின் அழைப்பையும் நிராகரிக்காமல், அதேவேளை பேச்சுப் பொறியிலும் சிக்கிக் கொள்ளாமலும் தான், மிகவும் கவனமாக இவ்வாறு கருத்தை வெளியிட்டுள்ளார் இரா.சம்பந்தன்.

அதேவேளை, ஜனாதிபதி தனது அழைப்பில் வெளிநாடுகளிடம் தீர்வைத் தேடாமல் உள்நாட்டில் பேசித் தீர்க்கலாம் என்று குறிப்பிட்டது, நிச்சயம் சர்வதேச அழுத்தங்களை அவர் விரும்பவில்லை என்பதை உணர்த்துகிறது.



அதாவது சர்வதேச அழுத்தங்களுக்குள் அகப்படாமல் தீர்வு ஒன்றைப் பெறும் கட்டாயத் தேவை அவருக்கு எழுந்துள்ளதா என்ற சந்தேகமும் எழுகிறது. ஏனென்றால், இனப்பிரச்சினைக்கு தெரிவுக்குழு மூலமே தீர்வு காணப்படும் என்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடாக உள்ளது.

ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடோ அதற்கு மாறானது.

அரசாங்கத்துடன் நடத்தப்படும் பேச்சுக்களில் ஓர் இணக்கப்பாட்டை எட்டிய பின்னர், அதை தெரிவுக்குழுவில் ஆராயலாம் என்பதே கூட்டமைப்பின் நிலைப்பாடு.

இந்த இரண்டு நிலைப்பாடுகளும் ஒரு புள்ளியில் சந்தித்தால் தான், அதுவே பேச்சுக்கான தொடக்கப்புள்ளியாக அமைய முடியும்.

தெரிவுக் குழுவை வைத்து 13ஆவது திருத்தச்சட்டத்தை பலவீனப்படுத்த அரசாங்கம் முனைவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கருதுகிறது.



எனவே, 13ஆவது திருத்தச்சட்டத்தை பலவீனப் படுத்துவதற்கான அரசாங்கத்தின் பொறிக்குள் விழுந்து விடாமல் இருக்க வேண்டுமானால், கூட்டமைப்பு தெரிவுக்குழுவில் இருந்து விலகியே நிற்க வேண்டும்.

ஆனால் தெரிவுக் குழுவில் மட்டுமே தீர்வு கிடைக்கும் என்று அரசாங்கமும் பிடிவாதமாக நிற்கும் நிலையில், ஏதாவதொரு தரப்பு சற்று இறங்கினால் தான், பேச்சுக்களை ஆரம்பிக்க முடியும்.

இத்தகைய நிலையில், இழுத்தடிப்புக்கு இடமில்லாமல் - ஆக்கபூர்வமான வகையில் பேச்சுக்களை நடத்த அரசாங்கம் இறங்கி வந்தால், ஒருவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பச்சைக்கொடி காண்பிக்கக் கூடும்.

ஆனால், அரசாங்கம் அத்தகையதொரு வாக்குறுதியின் அடிப்படையில் பேச சம்மதித்தாலும் கூட, அவ்வாறு பேச்சுக்களை ஆரம்பிப்பது உடனடிச் சாத்தியமாகுமா என்பது சந்தேகம் தான்.

ஏனென்றால், ஜெனிவா பொறியில் இருந்து தப்பிக்க, அரசாங்கம் இதனைத் தாராளமாகவே பயன்படுத்திக் கொள்ளும் வாய்ப்புகள் இருப்பதால், வரும் மார்ச் மாதத்துக்கு முன்னதாக, இத்தகைய பேச்சுக்களில் இறங்குவது கடினமான காரியமாகவே இருக்கும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள கட்சிகள் எல்லாம், மார்ச் மாதத்துக்கு முன்னர் பேச்சுக்களை நடத்த இணங்கி வரும் என்று நம்புவது கடினம்.

எனவே, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச நியாயமான முறையில் பேச்சுக்களை முன்னெடுத்துச் செல்வதற்கு தற்போது உண்மையாகவே விரும்புகிறார் என்று எடுத்துக் கொண்டாலும் கூட, அது உடனடிச் சாத்தியமான காரியமாக இருக்காது.

எனினும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அத்தகையதொரு உண்மையான அழைப்பை நெடுங்காலத்துக்கு உதாசீனப்படுத்தவும் முடியாது.

சர்வதேச அழுத்தங்கள் தீவிரம் பெறுகின்ற போது, இருதரப்பும் ஏதாவது ஒரு புள்ளியை நோக்கி நகர வேண்டிய நிலை உருவானாலும் ஆச்சரியமில்லை.

**கே. சஞ்சயன்**

(நன்றி- தமிழ்மிரர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலையிற் சோழர்கள்

மானங்கேணி என்று அழைக்கப்பட்ட பிரதேசம் இன்று திருகோணமலை நகர மத்தியில் பரபரப்பு நிறைந்த மின்சார நிலைய வீதியில் கட்டடங்கள் நிறைந்த பகுதியாகக் காணப்படுகிறது. இங்கு அமைந்திருக்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க ஆலயம் வெள்ளை வில்வபத்திர கோணநாயகர் ஆலயமாகும்.

பரம்பரை வழி வந்த கதைகளின் படி பண்டைய நாட்களில் திருக்கோணேஸ்வர ஆலய மகோற்சவ முடிவில் கோணேசர் நகர்வலம் வரும்போது ஒருநாள் இவ்வாலயத்தில் தங்கிச் செல்வதாகவும், கோணேஸ்வர ஆலய தெப்பத்திருவிழா இவ்வாலயத்திற்கு அருகில் இருந்த குளமான மான்னாங்கேணியில் இடம்பெற்று வந்ததாகவும் கருதப்படுகிறது.

குளக்கோட்டு மன்னன் திருக்கோணேச்சரத்தில் திருப்பணிகள் செய்தபோது அமைக்கப்பட்ட இக்குளத்தின் பெயரான மானாங்கேணியே அதனைச் சூழ்ந்த பிரதேசத்திற்கும், ஆலயச் சூழலுக்கும் வழங்கி வந்ததை காணக்கூடியதாக உள்ளது.

வெள்ளை வில்வமரங்களால் சூழப்பட்ட இவ்வாலயமும் அருகில் இருந்த மானாங்கேணி குளமும் 1624 ஆம் ஆண்டில் திருக்கோணேச்சரத்தை



போர்த்துக்கேசர் இடித்தழித்ததைத் தொடர்ந்து பராமரிப்பற்றுக் கைவிடப்பட்ட நிலையில் சிதைந்து போனது.

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் இருபதாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் ஆலயச்சூழலை துப்பரவு செய்தபொழுது ஒரு கல்வெட்டும், மகாவிஷ்ணு, பார்வதி ஆகியோரின் கற்சிற்பங்களும், ஒரு நந்தித்தேவரும், ஆவுடையாரும் கண்டெடுக்கப்பட்டன. திருத்த வேலைகளுக்காக நிலத்தினை அகழ்ந்த பொழுது அங்கு ஒரு புராதன ஆலயமொன்று இருந்து அழிவடைந்தமைக்கான ஆதாரங்களும் கிடைக்கப் பெற்றது.

மேற்படி நிகழ்வினைத் தொடர்ந்து திருகோணமலை மானாங் கேணி என்னுமிடத்தில் ஒரு கல்வெட்டும், புராதன சின்னங் களும் இருப்பதாகவும் அவற்றில் இருக்கும் தகவல்களை வெளிப்ப டுத்ததொல்லியளாளர் கள் தேவையெனக் குறிப்பிட்டு 01-02-1972 இல் தினகரன் நாளிதழில் ஒரு செய்தி வெளியாகியது.

இச்செய்தியினை வழங்கியவர் சாம்பல்தீவு பிரதேச சபைத்தலைவரான திரு.தம்பிராசா அவர்கள். இவரே திருகோணமலையில் காணப்பட்ட பல சோழர்கால தொல்லியல் சின்னங்களையும், கல்வெட்டுக்களையும் தேடி வெளி உலகிற்கு அறியத்தந்த பெருமைக்குரியவர்.

திரு.தம்பிராசா அவர்களின் அழைப்பு பேராசிரியர் செ.குணசிங்கம் அவர்களின் கவனத்தை ஈர்த்தது. அதன்விளைவாக 17-06-1972 இல் சோழ இலங்கேஸ்வரன் தொடர்பான மானாங்கேணி, கந்தளாய் வரலாற்றுக் கட்டுரைகள் 'திருகோணமலையில் இரு சோழர்கால கல்வெட்டுக்கள்' என்ற தலைப்பில் வீரகேசரியிலும் சமகாலத்தில் ஈழநாடு, தினகரன் பத்திரிகைகளிலும் வெளிவந்தது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டு, வெளிப்படுத்தப்பட்ட கல்வெட்டு துண்டமானது, அதன் இரு பக்கங்களும் வெட்டப்பட்டு இருந்ததினாலும், அதன் நடுவில் நீள்சதுரமான துவாரம் காணப்பட்டதாலும் அச்சாசனத்தின் சில சொற்களையும், எழுத்துக்களையும் மட்டுமே அடையாளங் காணக்கூடியதாக இருந்ததாக செ.குணசிங்கம் அவர்கள் குறிப்பிட்டிருந்தார்.

சிதைந்திருந்த நிலையில் கிடைத்தாலும் இச்சாசனம் ஒரு பொக்கிசமாகும். இலங்கையில் சோழ இலங்கேஸ்வரன் தொடர்பான தகவல்களைத் தரும் இரு கல்வெட்டுக்களில் இச்சாசனமும் ஒன்றாகும் என்பதே அதன் முக்கியத்துவத்திற்குக் காரணமாகும். சோழராட்சியில் பாண்டிய நாட்டுக்குரிய அரச பிரதிநிதியாக சோழவம்சத்தைச் சேர்ந்த ஒருவரை நியமித்து அவருக்கு சோழபாண்டியன் என்ற பட்டத்தினை வழங்கியதைப் போன்றே இலங்கையை நிர்வகித்த சோழப்பிரதிநிதிக்கும் சோழ இலங்கேஸ்வரன் என்ற பட்டம் வழங்கப்பட்டிருந்தது என்பதனை ஆதாரப்படுத்தும் சாசனம் இதுவாகும்.

**-வைத்திய கலாநிதி த.ஜீவராஜ்-**

## எத்தனை காலம் தான்......?

சிலருக்கு வீண்வம்பு,சண்டை, சச்சரவு என்றால் அதில் ஒரு தனி விருப்பம். எப்படியாவது நாளொன்றுக்கு ஓரிரு பிரச்சினைகளையாவது ஏற்படுத்தாவிட்டால் அவர்களுக்கு அன்று தூக்கமே வராது.

தாங்களாகவே பிரச்சினையை ஏற்படுத்திக் கொள்வார்கள் இன்றே இன்னுமொருவரை பிரச்சினைக்குள் தள்ளிவிடுவார்கள். பொலிஸ் நிலையமும், நீதிமன்றமும், சிலரின் சொந்த இருப்பிடங்கள் என்று நினைக்கின்றனர்.

மாதத்தில் இரு தடவைகளாவது அவ்வாறான இடங்கலுக்க செல்லாமலே இருக்க மாட்டார்கள். அவ்விதமான செயற்பாடுகலுக்கு பேரும், புகழும், பெற்ற ஒரு குடும்பத்தைப் பற்றி விமர்சிக்காதவர்கள் அப் பிரதேசத்தில் ஒருவருமே இல்லை என்றுதான் கூற வேண்டும்.

அரசாங்கம் இவ் வருடமுற்பகுதியில் 'டெங்கு' தடுப்பு நடவடிக்கைகளை நாடளாவிய அளவில் மிக மும்முரமாக முடுக்கி விட்டமை சகலரும் அறிந்ததே ஒவ்வொரு பிரதேசங்களிலும் அதற்கான மக்களின் ஒத்துழைப்பை அரச அதிகாரிகள் பெறத் தவறவில்லை

சிலர் அவற்றுக்கு தத்தமது பூரண ஒத்துழைப்பை வழங்கினாலும் சிலரின் அடாவடித்தனத்தினால் பல பிரதேசங்களில் பாரிய அசௌங்கரியங்கலுக்கு மக்கள் முகம் கொடுக்க நேர்ந்தது என்பதனையும் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

அப் பிரதேசத்தில் சகலருக்கும் தொந்தரவாக இருந்த அந்தக் குடும்பத்தின் அடாவடித்தனத்திற்கு குறைவே இல்லை அக் குடும்பத்தில் சுமார் 15பேர் உள்ளனர். அவர்கள் வசிக்கும் காணியின் விஸ்த்தீரணம் சுமார் 5பேர்ச்சாகும். அவர்கள் அனைவருக்கும் உள்ளது ஒரே ஒரு மலசல கூடமாகும்.

அந்த ஒரே ஒரு மலசல கூடத்தை அத்தனை பேரும் பாவித்தால் நிலைமை என்னவாக இருக்கம்? அங்குள்ள அயலவர்களால் நிலைமை என்னவாக சுாசிக்கக் சுட முடியாத ஓர் இக்கட்டான நிலைமை அங்கு இருந்து வந்தது.

அவர்கள் குடியிருக்கும் காணி அரச திணைக்களமொன்றின் ஒதுக்கீட்டுக் காணியாகும் அங்கு ள்ள அரச அதிகாரிக ளின் காதில் பூவை சுற்றி, கண்களில் மிளகாய் பொடியை தடவி எப்படியோ அதற்கு ஓர் அனுமதிப் பத்திரமொன்றையும் பெற்று விட்டார்கள்.

அது மாத்தி ரமல்ல அந்த சிறிய காணித்துண்டுக்குள் பல அனுமதியற்ற கட்டங்களையும் கட்டி முடித்துவிட்டார்கள். அயலவர்களினால் ஏற்கனவே அவை இடை நிறுத்தப்பட்டாலும் இரவோடு இரவாக எப்படியோ குறித்த கட்டடங்களின் வேலையை முற்றுப் பெறச் செய்வதில் அவர்கள் பெரும் கில்லாடிகளாக செயல்பட்டார்கள்.
சுருக்கமாகக் கூறப்போனால் அவர்கள் எந்த சட்டத்தையோ மதிப்ப தில்லை. எதையும் பெரிதாக பொருட்படுத்துவதில்லை. அப் பிரதேசத்தில் அவர்களை ஒரு குடும்பமொன்றை எவரும் கணக்கெடுப்பதில்லை.

டெங்கு தடுப்பு அதிகாரிகளினால் பல தடவைகள் அவர்கள் எச்சரிக்கை செய்யப்பட்டாலும் அயலவர்களில் காணிக்குள் குப்பை கூழங்களை அள்ளி வீசுவதில் அவர்கலுக்கு நிகர் அவர்களே மேலும் தாங்களே குப்பைகளை தம் காணிக்குள்ளே வீசிவிட்டு அயலவர்கலுடன் வீண் வம்புக்குச் சென்று நன்றாக கெட்டவார்த்தைகளினால் வேண்டிக் கட்டுவதில் அவர்கள் என்றுமே தவறுவதில்லை.

அது பற்றி பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து அவர்கள் கடுமையாக எச்சரிக்கை செய்யப்பட்டாலும் ஓரிரு நாட்கலுக்குப் பின் மீண்டும் அந்த சேட்டையை புரியத் தொடங்கி விடுவார்கள். ஆனால் அவர்களுக் தக்க பாடம் புகட்டியவர் அயலிலுள்ள ஓய்வு பெற்ற ஆசிரியர் ஒருவரே அதாவது அவர்கள் அந்த ஆசிரியரின் காணிக்குள் சிறிதளவு குப்பைகளை போட்டால் அவர் அதைவிட கூடிய குப்பைகளை எறிந்து விட்டு சும்மா இருந்து விடுவார்.

அவர் அந்தப்பிரதேசத்தில் செல்வாக்கு மிக்கவர் என்பதனால் அவரை எதிர்த்து அவர்களால் ஒன்றும் செய்ய முடியாது. அது மாத்திரமல்ல அவருக்கு முப்படையினருடனம் நல்ல தொடர்புகள் உண்டு. அவருடன் குறித்த குடும்பத்தினர் மோதுவதற்கு பயம் என்பதால் அவர் எதைச் செய்தாலும் மிக அமைதியாகவே இருந்து விடுவார்கள்.

"சுத்தம் சுகம் தரும்" "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்றெல்லாம் நாம் படித்திருக்கிறோம். அது மாத்திரமல்ல அந்த முதுமொழிக்கு ஒப்பாக பலர் நடந்து பயன் பெற்றாலும் அந்த குடும்பத்தினர் மாத்திரம் அப்படியான முதுமொழியை முன்னர் கேட்டிருந்தும் [illegible] றை பின்பற்றி [illegible] அதற்கு முக்கிய காரணமும் அவர்களின் குடும்பத்தில் எவருமே முழுமையான கல்வியை பாடசாலை ஊடாக பெறத்தவறியதே.

அவர்களுக்கு கல்வி அறிவு மிக மிக குறைவு என்பதினாலே அப் பிரதேசத்தில் அவர்கள் பிரச்சினைக்குரியவர்களாக காணப்படுவதற்கு காரணமாகும். அடுத்தது அவர்களிடம் பொறுப்பு, திட்டமிடல், போன்றவைகள் அறவே காணக்கூடியதாக இருக்கவில்லை. சாப்பிட்டால் மட்டும் போதும் என்பதே அவர்களின் பிரதான நோக்கு. அடிப்படை வசதிகளைப் பற்றி அவர்கள் என்றமே யோசித்ததே இல்லை இன்னமும் சேரி வாழ்க்கையில் இருந்து விடுபடவில்லை.

அரச காணியில் அத்துமீறி உட்பிரவேசித்து அதில் ஒரு பகுதியை விற்று, சட்டவிரோதமாகக் கேரிக் கட்டடங்களை நிர்மானித்து, பிள்ளைகலுக்கு சீதனமாக அவற்றை வழங்கிய வல்லமை அந்த குடும்பத்தின் தலைவருக்கே சாரும். அவ்விதமான தில்லுமல்லு வேலைகலுக்கு அவர் மிகவும் பிரசித்தமானவர் அது மாத்திரமா, பக்கத்துக் காணிக்காரர் அங்கு இல்லாத வேளையில் அவர் வேண்டி வைத்திருந்த கல்,மண்,சீமேந்து என்பவற்றை திருடி பெரியதொரு மதிலையும் நிர்மாணித்துள்ளார். அந்த குடும்பத் தலைவன்.

அயலவர்களிடம் அடி உதை வேண்டினாலும், பல தடவைகள் ஆஸ்பத்திரிக்கு சென்றுவாரக் கணக்கில் படுத்திருந்தாலும் அவர்கள் எதையும் பெரிதாக பொருட்படுத்துவதில்லை.

அதனால் அவர்களை அங்குள்ள மக்கள் இவ்வாறு உவமைப் படுத்துவார்கள். அதாவது "எருமை மாட்டுக்கு மேல் மழை பெய்வது போல்" ஆனால் சமூகத்தில் தாம் மதிப்புக்கும், கௌரவத்திற்கும் உரியவர்கள் என்பதனை வெளிக்காட்ட அவர்கள் எடுக்கும் பிரயத்தனங்கள் ஒன்றல்ல இரண்டல்ல டாம்பீக நடவடிக்கைகள் மூலம் தங்களின் கீழ்த்தரமான செயற்பாடுகளை மறைப்பதற்கு முயற்சிப்பார்கள்.

அவர்கள் எப்படித்தான் தங்கள் உண்மையான நிலைமையை மறைத்தாலும் அங்குள்ள மக்கலுக்கு அவர்களைப் பற்றி நன்றாகத் தெரியும் ஆனால் வெளியார் அவர்களின் திருகுதாளததிற்கு அகப்படுவதற்கு தவறுவதில்லை. அவ்வாறு வட்டிக்க பணம் கொடுத்து ஏமாந்தவர்கள் பலர்.

அவ்விதமானவர்களே அவர்கலுக்கு கடன் கொடுத்து நீதிமன்ற வழக்குகளில் சிக்கபட்டுள்ளனர். ஆனால் அப்பிரதேசத்திலுள்ள எந்தவொரு கடைக்காரர்களும் அவர்களுக்கு கடன் கொடுக்க முன் வருவதில்லை. என்றாலும் அவர்களின் பல பசப்பு வார்த்தைகளையும், உண்மைக்கு புறம்பான வாக்குறுதிகளையும் நம்பி ஏமாந்த கடைக்காரர்களும் அங்கு இரக்கத்தான் செய்கிறார்கள்.

மேலும் டாம்பீக வாழ்க்கைக்கு அப்பிரதேசத்தில் அவர்கள் ஓர் எடுத்துக் காட்டு. அவர்கள் அவ்விதம் நடப்பதால் அவர்களின் பேரக் குழந்தைகள் கூட அவர்களின் தீய வழியை எங்கே பின்பற்றி விடுவார்களோ என்ற பயம் பிரதேச மக்கலுக்கு இருந்து கொண்டே வருகிறது.

அவர்களின் தலை எழுத்து அப்படித்தான் இருந்தாலும் அப் பிரதேசத்தில் சிறப்பாக வாழும் ஏனையவர்கள் பார்த்து அவர்கள் ஏன் திருந்தாமல் இருக்கிறார்கள் என்ற கேள்வியும் அங்கு எழாமல் இல்லை.

தீமைகள் என்றுமே நிலைத்து நிற்பதில்லை அவ்வாறே நிகழும் ஒருவரை ஏமாற்றவும் முடியாது? என்றொறுநாள் உண்மைகள் வெளியில் வரத்தான் செய்யம். அன்று ஆடை இல்லாதவன் போன்று ஊர் மத்தியில் நிர்வாணமாக நிற்க வேண்டிய நிலை ஏற்படும்.

ஆம் இறைவன் நல்தொரு தீர்ப்பை அப்பிரதேச நீதிபதி மூலம் அவர்கலுக்கு வழங்கி விட்டான். அதாவது தவறான காணி அனுமதி பத்தி மூலம் பெறப்பட்ட அரச காணி அரச உடமையாக்கப்பட்டது. சகல கட்டடங்கலும் அனுமதியற்ற கட்டடங்களாக கணிக்கப்பட்டு அழிக்கப்பட்டன.

தவறான தகல்கள் மூலம் அதிகாரிகளை ஏமாற்றி பெறப்பட்ட காணி அனுமதிப்பத்தின் ஊடாக வழங்கிய அனைத்து அரச மானியங்கலும் மீளச் செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. அது மாத்திரமல்ல குறித்த குடும்பத்தினரிடம் அக் காணியின் ஒரு பகுதியை விலைக்கு வேண்டியவரின் காணியும் அரச உடமையாக்கப்பட்டதுமல்லாமல அவரின் வீடு உடைக்கப்பட்டது.

என்றும் சட்டததை எவராலும் ஏமாற்ற முடியா தென்பதற்கு இது நல்லதொரு படிப்பினையாகும். அங்குள்ள மக்களுடன் அன்யோன்யமாக, அமைதியாக ஒற்றுமையான

### ...நாட்டு நடப்பு...

வாழ்ந்திருத்தால் அக்குடும்பத்தினருக்கு அப்படியொரு தண்டனை கிடைத்திருகாதென பிரதேச மக்கள் பேசிக் கொள்வதில் என்ன தவறு.

- துட்டகைமுனு -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதை

# சாதனை



சாலையின் இருபுறமும் அடர்ந்த உயரமான மரங்கள் வீதியிலே பலர் போவதும் வருவதுமாக இருக்கின்றனர். பல வாகனங்கள் அவன் முன்னே வந்து கடந்து செல்கின்றது வெகுதூரம் நடந்து வந்த களைப்பால் பேருந்து தரிப்பிடத்தில் இருந்த ஆசனத்தில் அமர்ந்து கொள்கின்றான் சிந்துஜன்.

மலர்களைப் போல அவனது உள்ளத்திலும் ஆயிரம் எண்ண ங்கள் மலர்ந்து மறைகின்றது. சில நினைவுகளை மட்டும் அவன் மறக்க நினைக்கின்றான் ஆனால் அவை நீண்ட கடலில் அலைகள் கரை வந்து மோதிக் செல்வது போல சிந்துஜன் மனதிலும் வந்து அலை மோதிக் செல்கின்றது.

பேருந்து தரிப்பிடத்திற்கு வருகின்ற பேருந்துகளை நோட்டமிட்டவாறு அமர்ந்திருக்கின்றான். சிந்துஜனின் முன்னே நின்ற பேருந்து ஒன்று முன்னோக்கி பயணித்தது. சிந்துஜன் நினைவுகளோடு அவனது மனமும் பின்னோக்கி பயணித்தது.

பல வருடங் களுக்கு முன்பு பட்டாம் பூச்சியாய் பெற்றோரின் கரம் பற்றி அருமை தங்கை சாராவை கையில் பிடித்துக் கொண்டு ஆனந்தமாய் வாழ்ந்த குடும்பம். யார் கண் பட்டதோ பாழாகி சிதைந்தது சிந்துஜனின் குடும்பம். அப்போது சிந்துஜன் சாதாரண தரம் படித்துக் கொண்டிருந்தான்.

தங்கை சாராவோ தரம் எட்டில் படித்தாள். மழை மேகம் வானில் கருக் கொண்டதைப் போல யுத்த மேகம் ஊரை சூழ்ந்து கொண்டது.

கடும் மோதல் கடுமையான பிரச்சனை மக்கள் எத்திசையில் செல்வது என்று புரியாது புலம் பெயர்ந்தனர். அதில் சிந்துஜனின் குடும்பம் நோக்கி மக்களோடு மக்களாக ஓடும் போது குண்டு தாக்குதலுக்கு இழக்காகி ஒரே நேரத்தில் தாயையும் தந்தையும் இழக்க நேர்ந்தது.

அடியற்ற மரம் போல இருந்த சிந்துஜனுக்கு அன்று ஆறுதலாக இருந்தது அவனது தங்கை சாரா தான்.

இன்னல்களின் மத்தியில் இனப் பிரச்சனைகள் மத்தியிலும் சாராவை காப்பாற்றினான். இடையிலே தனது படிப்பை நிறுத்திய சிந்துஜன் சாராவின் படிப்புக்காக உடல் உதிரத்தை சாராக்ப் பிழிந்து கஷ்டப்பட்டு உழைத்து அவளை உயர்தரம் படிக்க வைத்தான்.

உயர்தரம் பரீட்சை பெறுபேறு வந்தது. சாராவோ விஞ்ஞானத் துறையில் முதலிடம் பெற்றாள். சாரா யாழ் பல்கலைக் கழகத்திற்கு தெரிவானாள் சிந்துஜன் தங்கையின் படிப்புக்காக தனது நில புலங்களை விற்று பல்கலைக் கழகம் அனுப்பி வைத்தான்.

நாட்கள் நகர்ந்து நிமிடங்கள் வருடங்களாக மாறியது. காலச்சக்கரம் வேகமாய் சுழன்றது. தங்கை சாராவை டொக்டராக பார்ப்பதற்காக காத்திருந்தான் சிந்துஜன். பெற்றோர்கள் சாராவை சாதிக்க வைக்க நினைத்ததை இன்று சிந்துஜன் சாதித்து விட்டான்.

தொலைவிலே யாழ் பேருந்து வருவதை கண்டு தனது எண்ணத்தை அதன் மீது தெளித்தான். பேருந்து தரிப் பிடத்தில் பேருந்து வந்த நின்றது, சிந்துஜனின் கண்கள் சாராவை தேடியது. பேருந்திலிருந்து பயணிகள் இறங்கிய வண்ணம் இருந்தனர்.

அண்ணா என்று குரல் திரும்பி பார்த்தான். அவன் கண்கள் முன்னே டொக்டராக சாரா நின்றாள். தங்கையை பார்த்த சிந்துஜனின் கண்கள் கலங்கியது. வேதனைகளின் மத்தியில் சாதனை படைத்த பூரிப்புடன் சாராவின் கரம் பிடித்துக் கொண்டு சாலையோர மாய் இருவரும் பயணித்தனர்.

முற்றும்

**மேனுகா வேலாயுதம்**
வரோதய நகர்
திருகோணமலை

---

# ஊமைக் குரல்

பாடசாலை விட்டு வந்த சுஜீவன் அறையின் மேசையில் கிடக்கும் கடிதத்தைப் பார்க்கிறான். இது அண்ணன் கையெழுத்தாச்சே என்று எதிர்பார்ப்பை வளர்த்தபடி அவசர அவசரமாக கடிதத்தை பிரித்துப் படிக்கிறான். படித்தவன் கண்களில் நீர் வடிய மூலையில் சாய்கிறான்.

சுஜீவன் 12 வயசுச் சிறுவன். போரின் விளைவால் அனாதையாகி விட்டவன். உறவினரோடு தங்கித்தான் வாழ்கிறான். எதிர்காலம் என்பது அவனைப் பொறுத்தவரை நிச்சயமில்லாததாகி விட்டது.

சசி சுஜீவனின் அண்ணன். அவர்கள் இருவருமே குடும்பத்தில் மிஞ்சி உள்ளனர். தாயும் தகப்பனும் சில ஆண்டுகள் முன்னர், யாழ் குடாவில் கிளாலிக் கடற்பரப்பில் பயணிக்கும் போது, சிங்களக் கடற்படை பயணிகள் படகுமீது நடத்திய தாக்குதலில் படகோடு காணாமல் போனவர்கள் தான்.

இன்று வரை அவர்களின் கதி என்னவென்று யாருக்கும் தெரியாது. சசி கெட்டிக்காரன். இழப்புக்களைக் கண்டு துவண்டு விடாது உயர்தரம் படித்து கண்டி பேராதனைப் பல்கலைக் கழகத்திற்கு தெரிவாகிப் போனான்.

சசியைப் பொறுத்தவரை அவன் பிறந்தது வளர்ந்தது எல்லாம் அவனின் சொந்த ஊரான ஒரு விவாசயக் கிராமத்தில் தான். தாயும் தகப்பனும் ஆசிரியர்கள் என்றாலும் விவசாயத்தோடும் ஒன்றிப்போனதாலோ என்னவோ அவர்களுக்கு சொந்த ஊரை விட்டு வேறிடம் நகரப் பிடிக்கவில்லை.

அப்போ அவர்களின் திட்டமெல்லாம் பிள்ளைகள் கஸ்டங்கள், நஸ்டங்கள், உறவுகள் என்று எல்லாம் அறிந்து வளர வேண்டும் என்பதாகத் தான் இருந்தது. அவர்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யத்தக்கதாகவே சசியும் உருவாகி இருந்தான்.

பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகி கண்டிக்குப் போன போது தான் அவன் முதன்முதலாக புதிய சூழலுக்கும், புதிய மனிதர்களுக்கும், வேற்று மொழிக்கும் என்று புதிய வற்றிற்கு முகங்கொடுக்க வேண்டி இருந்தது.

அன்று பல்கலைக்கழகத்தில் முதல் நாள். வழக்கம் போல சாதாரண உடையோடு எளிமையாக சசி தனது வகுப்பறை நோக்கிச் சென்று கொண்டிருந்தான். போகும் வழியெங்கும் இளைஞர்களும் யுவதிகளும் கூடிக்கூடி ஏதோ பேசிக் கொண்டிருந்தனர். அவன் அவற்றை அவதானித்தபடி அவர்களைப் பொருட்படுத்தாது தனது முதல் வகுப்பு நோக்கி பல கனவுகளோடு நடந்து கொண்டிருந்தான்.

அப்போ யாரோ கைதட்டும் ஓசை கேட்டு திரும்பிப் பார்த்தான். ஒரு குழு அவனை தங்களிடம் வர அழைத்தது. சைகை மூலம் தனக்கு வகுப்பு என்று சொல்லி விட்டு சசி வகுப்பை நோக்கிச் சென்றான்.

வகுப்பு முடிந்து வெளி வரும் போது அதே குழாம் அவனை நெருங்கி வந்து " அடேய் கூப்பிட்டோம் எல்லோ ஏன் வராமல் போனாய் " என்று மிரட்டலாக தமிழில் கேட்டனர். சசியும் பதிலுக்கு "எனக்கு வகுப்புக்கு நேரமாச்சு அதுதான் சைகை காட்டிட்டுப் போனன்" என்றான் துணிச்சலை வரவழைத்தப்படி.

அதற்கு அவர்கள் "என்ன எதிர்த்தா கதைக்கிறாய்... நாங்கள் உனக்கு "சீனியேர்ஸ்..." எங்கள் உதவி இல்லாமல் நீ இங்கிருந்து வெளியேற முடியாது" என்று மேலும் மிரட்டினர்.

அதைக் கேட்ட சசி கொஞ்சம் திக்குமுக்காடித்தான் போனான். "இப்ப என்ன கேட்கிறீங்கள்" என்று அப்பா வித்தனமாகக் கேட்டான். "உன்னை ஒன்றும் கேட்கவில்லை. பின்னேரம் விடுதிக்கு வா" என்றனர் அவர்கள்.

"வராமல் விட்டா நடக்கிறதே வேற" என்று போகும் போதும் மிரட்டி விட்டுச் சென்றனர். பின்னேரம் போல சசி தயங்கித் தயங்கி அவர்கள் சொன்ன விடுதிக்குச் சென்றான். அங்கு அவனைக் கண்ட அந்தக் கூட்டத்தினர் "வாடா என்ன சுணக்கம்" என்றனர். "சுணக்கம் இல்லை அண்ணா.. சொன்ன நேரத்துக்கு வந்திட்டன்.. ஏன் கூப்பிட்டிங்கள்" என்று அப்பா வித்தனமாய் பதிலுக்கு வினவினான் சசி.

"இதோடா ஏன் கூப்பிட்டமாம்... இங்க உனக்கு விருந்து வைக்கப் போறம் அதுதான் கூப்பிட்டம்" என்றனர் அவர்கள் நக்கலாக. அதைக் கேட்ட அவர்களின் பெண் நண்பிகள் வாய்விட்டு பெரிசாக சிரித்தனர். அவர்கள் தங்கள் ஆண் நண்பர்களை உற்சாகப்படுத்தும் விதமாக கூச்சலும் போட்டனர்.

இதையெல்லாம் அவதானித்த சசி இவர்கள் பகிடிவதைக்கு தன்னை பலியாக்கப் போகின்றனர் என்பதை தெளிவாகப் புரிந்து கொண்டு நடக்கிறது நடக்கட்டும் என்று துணிச்சலை வரவழைத்தப்படி, அவர்களை எதிர்கொண்டான்.

அவனுடைய அப்பா வித்தனத்தைக் கண்டுவிட்ட அந்த மாணவர்களும் மாணவிகளும் அவனை இலகுவில் விடுவதாகவும் இல்லை. ஆரம்பத்தில் பெயர் ஊர் என்று கேள்விகள் கேட்டு ஆரம்பிக்கப்பட்ட அவர்களின் அறிமுகப் பகிடிவதை ஆபாசம் கலந்து அக்கிரமாகத் தொடர்ந்தது.

அது எல்லை மீறப் போகிறது என்பதை ஊகித்து அறிந்து கொண்ட சசி " இதுக்கு மேல என்னால் எதுவும் செய்ய ஏலாது.. செய்யுறதைச் செய்யுங்கோ" என்றான் துணிவோடு. "அடேய் நீயும் எங்கட ஊர் தான் நாங்களும் அதே ஊர் தான்... தனியாள் உனக்கே இந்தளவு திமிர் எண்டா எங்களுக்கு எவ்வளவு இருக்கும்" என்று அவர்கள் பதிலுக்கு அவனை மிரட்டியதுடன் நெருங்கி வந்து சட்டையை பிடித்து இழுது தள்ளிவிட்டனர்.

தரையில் விசையோடு விழுந்த சசி மூர்ச்சையுற்றான். அதைக் கண்டு அவர்கள் ஓட்டம் பிடித்தனர். சில மணி நேரத்தின் பின் கண் விழித்த சசி தான் வைத்தியசாலையில் இருப்பதை உணர்ந்தான். ஆனால் அவனால் பழைய நினைவுளை மீட்டிப் பார்க்க முடியவில்லை. தான் ஒரு புதிய உலகில் இருப்பது போல உணரத் தொடங்கினான்.

தன்னிலை அறியாது தவித்தான். வைத்தியர்கள் வந்து அடிக்கடி பரிசோதித்துவிட்டுச் சென்றனர். இறுதியில் அவன் மனநோய் மருத்துவமனைக்கு மாற்றப்பட பரிந்துரைக்கப்பட்டு அங்கு சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டான். அங்கு இரண்டு ஆண்டுகள் கழிந்துவிட்ட நிலையிலும் அவன் இன்னும் பழைய நிலைக்கு திரும்பவில்லை. இருந்தாலும் தன் தம்பியை மட்டும் அப்பப்போ சிறிதளவு அவனால் நினைக்க முடிந்தது.

அவனுக்காக இயலும் போதெல்லாம் ஓரிரு வரிகள் எழுதுவான். அப்படி இரண்டு வருடங்கள் எழுதிய அந்த வரிகளை தம்பிக்கு அனுப்ப முடிவு செய்தான். தாதிகளின் உதவியுடன் அதை தம்பிக்கு அனுப்பியும் வைத்தான்.

இரண்டு ஆண்டுகளாய் தன்னை விட்டுப் பிரிந்துவிட்ட, தன் ஒரே ஆறுதல், சொந்த அண்ணனின் எழுத்துக்களை, வரிகளை கண்டவிட்ட அந்தப் பிஞ்சு சுஜீவன் அண்ணனை நேரில் காண்பதற்காய் ஏங்கினான். வந்த கடிதம் தாங்கி வந்த பாச வரிகளை மீண்டும் மீண்டும் படித்துப் படித்து கண்ணீரால் அதை பூஜித்தான்.

அவன் படும் துன்பங்களை, தாங்கும் ஏக்கங்களை அண்ணனிடம் பகிர வழியின்றி மெளனியாக அழுவதை விட அவனுக்கு வேறேதும் செய்யத் தெரியவில்லை. அவன் சின்னவன். அவனின் ஆசைகள் உணர்வுகளுக்கு மதிப்பளிக்க யார் இருக்கினம். அம்மாவா அப்பாவா யாருமே இல்லை. ஏக்கங்கள் மட்டுமே அவனோடு மிஞ்சி இருக்கிறது. ஏங்கியபடியே இயலாமையோடு வெற்றறையின் மூலைக்குள் கடிதத்தை அணைத்தபடி முடங்கிக் கொண்டான் சுஜீவன்.

அவனைப் பொறுத்தவரை அவனுக்குள் இவ்வளவு துன்பங்களையும் ஏக்கங்களையும் பரிசளித்தவர்கள் பெற்ற தண்டனை என்று ஏதுமில்லை. அதற்காய் அவனுக்கு கிடைத்த பரிகாரங்களோ...சமூகத்தில் அனாதை.. பரிதாபத்துக்குரியவன் என்பவைதான். குற்றம் செய்யாமலே மூலைக்குள் முடங்கிவிட்டது சுஜீவன் மட்டுமல்ல. அவனைப் போன்று எத்தனையோ பிஞ்சுகள்.

அவர்களின் நியாயங்கள், எதிர்பார்ப்புக்கள், தீர்வுகள் இன்றி ஏக்கங்களோடு வெளிப்படாமலே ஊமைக் குரல்களாய் அடங்கிப் போயிருக்கின்றன. உலகில் யார் இருக்கார் அவர்களுக்காய் நீதி கேட்க ஊமைக் குரல்களாய் அடங்குதல் தான் அவர்கள் விதியோ அல்லது சதியோ நாளை இந்தச் சுஜீவன் தன் விதியை சதியை வெல்லானா எதிர்பார்ப்புகளோடு என் விழிகள் திறக்கின்றன...

அப்போ மூலைக்குள் அடங்கியவன் நிச்சயமான தெம்போடு மற்றவர்களின் ஆதரவுக்கு இடங்கொடாது தானே எழுவதைக் கண்டேன்.. அண்ணனுக்காய்..தனக்காய்..தன் போன்றோருக்காய்..என்பதாய் உணர்ந்தேன்.

**தேசப்பிரியன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவி முரசு

## நிலுவை

நீ திருப்பித் தரலாம்
மணிக் கூட்டை
கை விளக்கை, கத்தரிக்கோலை
(கன்னிமீசை வெட்ட நீயாய்க்
கேட்டது நினைவு)
கடும்பச்சை வெளிர் நீலக்
கோடன் சேட்டுக்களை
தரலாம்- இன்னமும் மிச்சங்களை
இன்று பல்லி எச்சமாய்ப்போனவற்றை

உன் முகட்டில் சுவடாய்ப்
பதித்த
என் காட்டு ரோஜா உணர்வுகளையும்,
அள்ளியள்ளித் தெளித்த
திவலைக் குளிர்ச்சியையும்
எப்படி மறுதலிப்பாய்?
எந்த உருவில் திருப்பி அனுப்புவாய்?

கடிதத்திலா
காகிதப் பொட்டலத்திலா?
இதில் நான்
உனக் கிட்ட உதட்டு
முத்தங்களையோ
நீ எனக்குள் செலுத்திய
ஆயிரத் தெட்டுக் கோடி
விந்தணுக்களையோ
நான் கணக்கில் எடுத்து
சேர்க்கவில்லை என்பது மட்டும்
நமக்குள்
ஒரு புறமாகவே இருக்கட்டும்

**ஆழியாள்**
கொட்டியாரம், இலக்கிய மரபு

## பாதுகாப்பாம்!

பாடுவேன் 'கவிஞன்' அல்லன்!
பாவல்ல புலவனே யான்!
தேடுவேன் பொருளைத் தேடிக்!
தீட்டுவேன் பொருத்தமாக!
நாடுவேன் முரசை, அ்.தே
நம்மலைப் பாதுகாப்பாம்!
மூடுவேன் அமங்கலத்தை,
மொழிகுவேன் மங்கலந்தான்!

பாலாறு - தேனாறாகப்
பாயும் பா கருப்பஞ்சாறய்!
ஏலாது கலப்பைக் கீறல்
இனியவன் நான் தனிமைக்காரன்!
நாலாறின் மேலாய்ப் போவோன்
நானல்லன் ஏனாமென்றால்
நூலான குறல் இரண்டுள்
நுழைத்த தாம் ஆழி வாழ்வை!

**தாமரைத்தீவான்**
(ஈச்சந்தீவு கிண்ணியா)

## உன் மனம் திறந்திடு

உன் இமைகள் என்னும் பாய் விரி
என் கனவுகள் அங்கே தூங்கட்டும்
உன் பார்வை என்றும் முள் ஏறி
என் இதயம் எங்கும் கிளிக் கட்டும்
புன்னகை என்னும் மழை பொழி
என் சரிதம் கொஞ்சம் நனையட்டும்
ஓரிரு வார்த்தைகள் நீ தொடு
என் இதயப் பூக்கள் மலரட்டும்
உன் மனம் திறந்து இடமளி
என் காதல் அங்கே துளிராகட்டும்

**கா. கவீயா**

## உள்ளம் எனும் புத்தகம்

**பிரேம் ராவாட்**



கபீர் என்ற ஞானி ஒரு அழகான விடயத்தை கூறினார். "கண்களால் பார்த்ததை நான் கூறுகிறேன். ஆனால் நீயோகாகிதத்தில் படித்த விடயத்தை நம்புகிறாய்"என கூறினார். இன்று எத்தனை யோபுராணங்கள், இதிகாசங்கள் உள்ளன. ஒவ்வொருமதங்களிலும், மக்கள் ஏதோஒருவேத நூலிலே நம்பிக்கைவைக்கிறார்கள்.

ஆனால் உங்களதுஉள்ளத்திலும் ஒருவேதநூல் உள்ளது. கடவுள் கூறியது ஏதாவது உள்ளது என்றால், அது அந்த உள்ளம் எனும் புத்தகத்தில் எழுதப் பட்டுள்ளது. ஆனால் அதனை படிப்பதற்கு நீங்கள் கல்விகற்றவராக இருக்க வேண்டியஅவசியம் இல்லை.

அதனைப் படிக்க உங்களுக்கு கண்கள் கூட தேவையில்லை. உங்களுக்கு அந்த ஆர்வும் மட்டுமே தேவை. அதற்கு வழி காட்டுபவர் ஒருவர் இருக்கவேண்டும். உங்களை அந்த இடத்திற்கு எடுத்துச் செல்லக்கூடியவராக இருக்கவேண்டும். வேறுஒன்றும் தேவைஇல்லை.

ஆனால் இன்று குரு எனத் தம்மை கூறிக் கொள்ளும் பலர் இருக்கிறார்கள், அவர்களிடம் எந்த குதிரையில் பணம் கட்டுவது நல்லது என்று கேட்க பக்தர்கள் செல்கிறார்கள். இந்த குதிரையின் மேல் பணம் கட்டுஎன கூறுவார்கள்.

ஆனால் உண்மையிலே அது அல்ல உங்களது வாழ்வின் இலட்சியம். அது அல்ல நீங்கள் சென்று அடைய வேண்டிய இடம். நீங்கள் சென்று அடைய வேண்டிய இடம் உங்களின் உள்ளே உள்ளது.

வெளியே தேடினால் வெளியே உள்ள விடயங்களை அடையலாம். ஆனால் எவ்வாறு உங்களின் உள்ளே உள்ள இலட்சியத்தைஅடைவீர்கள்? ஞானிகள், மகான்கள் என்ன கூறினார்கள்? உங்களின் உள்ளே உள்ள புண்ணியஸ்தலம் போன்ற ஒன்று வெளியே எங்குமே இல்லைஎன கூறினார்கள்.

எல்லா வேத சாஸ்திரங்களினதும் கருப்பொருள் உங்களின் உள்ளே உள்ளது. இதனை நீங்கள் அனுபவம் செய்ய முடியும். யோசனை செய்வது அல்ல. அனுபவம் செய்ய வேண்டும். இது விவாதம் செய்ய வேண்டிய ஒன்று அல்ல. அனுபவிக்க வேண்டிய ஒன்று.

யார் ஒருவரிடம் தண்ணீர் இல்லையோ, அவர் தண்ணீர் பற்றி பெரிய விளக்கத்தை தாகம் உள்ளவனுக்கு கொடுக்கலாம். ஆனால் அவராலே தண்ணீர் கொடுக்கமுடியாது.

சிந்தனைகள் தொடரும்.....

## அரங்க விளையாட்டுக்களும் நாடக செயற்பாட்டில் அதன் பங்களிப்பும், முக்கியத்துவமும்.

நாடகம் என்பது ஒரு விடயத்தினை ஒரு நிகழ்த்திக் காட்டுவதாகும். நாடகத்தில் நடிப்புப் பயிற்சி என்பது மிகவும் முக்கியமானதாகும்.

ஏனெனில் நாடக நடிகர் ஒருவருக்கு நடிப்பு என்பது முறையாக இருந்தால் தான் சிறந்த வெளிப்பாட்டை பார்வையாளர்களுக்கு வெளிப்படுத்த முடியும். எனவே வெளிப்பாட்டை அடைவதற்கு நடிகனானவனுக்கு வழங்கப்படும் பயிற்சிகள் ஏராளம். அதாவது அவன் கற்றுக் கொள்ள வெண்டிய விடயங்கள் நிறையவே உள்ளன.

நடிகனானவனுக்கு நடிப்புப் பயிற்சி, குரல்பயிற்சி, கற்பனைப்பயிற்சி, உடலுக்குத் தேவையான பயிற்சிகள், மனதுக்குத் தேவையான பயிற்சிகள், மனதுக்கும் குரலுக்குமான பயிற்சிகள், என பயிற்சிகள் நீண்டு கொண்டே செல்வதைக் காணலாம். இவ்வாறான செயற்பாடுகள் மூலமாகத்தான் தன்னை ஒருவன் நாடகத்துறைக்கு தயார் படுத்திக் கொள்ள முடியும்.

எனவே நடிகருக்கு வழங்கப் படுகின்ற அடிப்படைப் பயிற்சிகளின் போது அவர்கள் சிலவேளைகளில் சோர்ந்து விடுவதற்கான சந்தர்ப்பங்களும் அமைந்து விடுகின்றன. இவ்வாறான சோர்வுகளை நீக்கவும் மிகுந்த ஆர்வமுடன் மபணவர்கள் குறிப்பிட்ட செயற்பாட்டில் ஈடுபட அரங்கப்பயிற்சிகளிடையே அரங்க விளையாட்டுக்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

இந்த அரங்க விளையாட்டுக்கள் வெறுமனே விளையாட்டாக இல்லாமல் குறிப்பிட்ட ஒரு அரங்க விளையாட்டின் ஊடே ஏதாவது ஒரு விடயம் பொதிந்திருப்பதைக் காணமுடிகிறது. அவ்வியம் நாடகச்செயற்பாட்டை சார்ந்ததாய் இருக்கும். வெறுமனே கேளிக்கை நிறைந்த விடயமாக அல்லாமல் அந்த கேளிக்கையின் ஊடே நாடகத்தோடு இணைந்த தகவலைத் தருவதாய் இருக்கும்.

"நாடகம் சார்ந்த பயிற்சிகள் அலுப்பில்லாமலும் சலிப்பில்லாமலும் நகர்வதற்கு இவ்வரங்க விளையாட்டுக்கள் பெரும் துணை புரிகின்றன" எனவே அந்த அரங்க விளையாட்டுக்கள் மூலம் மாணவர்கள் அல்லது அரஙாகச் செயற்பாட்டாளர்கள் எவ்வகையான விடயங்களைப் பெற்றுக் கொள்கிறார்கள் என அறிய முற்படும் போது பின்வரும் விடயங்கள் முக்கியமாக அமைகின்றன.

01)மாணவர்கள் கூச்சமின்றி ஒரு செயற்பாட்டைச் செய்வதற்கு முன்வருவர்.
02) தமது பேச்சாற்றலை வெளிப்படுத்திப் பேசுவர்.
03) முன் அனுபவங்களின் பயன் பெற்றுச் செயற்படுவர்.
04) ஒரு விடயம் சார்ந்து தெளிவாக உரையாற்றுவர்.
05) பாத்திரத்திற்குப் பொருத்தமாகப் போலச்செய்தல் பண்பை வளர்த்துக் கொள்வர்.
06) குழுவாகச் செயற்படுவர்.
07) தமது எண்ணக்கருத்தை உணர்வைப் பயமின்றி வெளிப்படுத்துவர்.
08) எப்பொழுதும் உற்சாகமாகச் செயற்படுவர்.
09) செயற்பாடுகளில் ஈடுபட்டுச் செயற்படுவர்.
10) சந்தர்ப்ப சூழ்நிலைகளை உணாந்து சிந்திக்கும் ஆற்றலை வெளிப்படுத்திச் செயற்படுவர்.
11) புதிய விடயங்களை தேடியறிந்து வெளிப்படுத்துவர்.
12) சூழல் வளங்களை பயன்படுத்தித் தனது ஆற்றலை வெளிப்படுத்துவர்.
13) சுயஆக்கங்களைத் திறம்படச் செய்து காட்டுவர்.



14) தன்னையும் பிறறையும் மகிழ்வூட்டுவர்.
15) கருத்தூன்றிச் செவிமடுத்தச் செயற்படுவர்.
16) எந்நேரமும் எதற்கும் தயார் நிலையில் இருப்பர்.
17) நேரடி அனுபவங்களை பெற்றுக் கொள்வர்.
18) தம்மிடையே இருக்கின்ற திறனை ஒளிவு மறைவின்றி வெ்ளிப்படுத்துவர்.
19) சந்தோசமான மனிநிலையைப் பெறுவர்.
20) ஒரு பிரச்சனையைத் தீர்க்க முற்படுவர்.

என அரங்க விளையாட்டுக்களின் முக்கியத்துவத்தைக் கூறிக்கொண்டே போகலாம்.

அரங்க விளையாட்டுக்கள் (Theatre Games) என்பவை மாணவர்களுக்கு மகிழ்ச்சியூட்டும் தன்மையை மட்டும் கொண்டவையாக விளங்காமல் ஒரு செயற்பாட்டில் ஒருவர் பெறவேண்டிய அல்லது நடிகர் ஒருவருக்கு இருக்க வேண்டிய பண்புகளை வழஙடகுவதிலும் விருத்தி செய்வதிலும் எவ்வாறு பங்களிப்பினை வழங்குகின்றது என்பதை அவ்விளையாட்டுக்களை விபரிப்பதன் மூலமாக விளங்கிக்கொள்ளலாம்.

"இவ்வரங்க விளையாட்டுக்கள் மகிழ்வூட்டி நிற்கின்ற அதேவேளை நாடகநடிகருக்குத் தேவையான கற்பனை, அவதானம், புலனுணர்வு, மனவெழுச்சிகள், சமூகஉணர்வு போன்ற பல திறன்களை மகிழ்ச்சியினூடாக கற்றுக் கொடுக்கின்றது என்பது வெளிப்படையாகின்றது."

நாடகசெயற்பாட்டில் நடிகரை உருவாக்குவது என்பது ஒரு பெரிய செயற்பாடாகும். இந்த செயற்பாட்டிற்கு அரங்க விளையாட்டுக்கள் பெரும் துணை புரிகின்றன.

அடுத்தவாரம் அரங்கு அசையும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விஜய் தான் ரியல் ஹீரோ என பாராட்டிய தயாரிப்பாளர்கள்



நடிகர் விஜய் தன்னை வைத்து ஆரம்பத்தில் படமெடுத்த ஐந்து தயாரிப்பாளர்களுக்கு தலா ஐந்து லட்சம் வீதம் ரூ. 25 லட்சம் உதவினர். விஜய் செய்த இந்த உதவியை தயாரிப்பாளர்கள், தமிழ் திரைப்பட துறையை சார்ந்தவர்களும் பாராட்டிய வண்ணம் உள்ளனர்.ஆரம்பத்தில் படம் பண்ணி ஏணியாக இருந்த தயாரிப்பாளர்களை ஹீரோக்கள் மறந்து விடுவார்கள்.அந்த விதத்தில் விஜய் ரியல் ஹீரோ என பல படங்களை தயாரித்த பூர்ணசந்திரராவ், சங்கலி முருகன், இராம. நாராயணன் ஆகியோர் பாரட்டிள்ளனர். சி.வி. ராஜேந்திரன் (ஒன்ஸ்மோர்), ஆர்.சாந்தா (மின்சார கண்ணா), எம்.ராஜாராம் (வசந்த வாசல்), எ.ஸ். சௌந்திரபாண்டியன் (ராஜாவின் பார்வையிலே), எ.ம். பாலாஜிபிரபு (விஷ்ணு) ஆகிய தயாரிப்பாளர்கள் விஜய்யிடம் உதவி பெற்றனர்.

## ஒரே நாளில் 35 கோடி வசூலித்து தூம் 3 சாதனை



பாலிவுட் நடிகர் அமீர்கான் இரட்டை வேடத்தில் நடித்துள்ள தூம் 3 படம் ஒரே நாளில் ரூ.35 கோடி வசூலித்து சாதனை படைத்துள்ளது. முழுக்க முழுக்க அமெரிக்காவின் சிகாகோ நகரிலேயே படமாக்கப்பட்டுள்ள இப்படத்தில் அவருடன் அபிஷேக்பச்சன், ஜாக்கிசெராப், நடிகை கத்ரினாகைப், உதய் சோப்ரா ஆகியோர் நடித்துள்ளனர். ஜீன்ஸ் படத்தில் பிரசாந்த் இரட்டையர்களாக நடித்தது போல் தூம் 3 படத்தில் அமீர்கான் கிராபிக்ஸ் மூலம் இரட்டையர்களாக நடித்துள்ளார். ரூ.250 கோடி பட்ஜெட்டில் பிரமாண்டமாக தயாரிக்கப்பட்ட இந்த படம் கடந்த வெள்ளிக்கிழமை உலகம் முழுவதும் வெளியானது. இந்தியாவில் மட்டும் 4000 தியேட்டர்களில் திரையிடப்பட்டது. சென்னையில் இந்தி மற்றும் தமிழில் வெளியாகியுள்ளது. இதே போல் ஆந்திராவில் தெலுங்கு மொழியில் ரிலீசானது. படம் வெளியான முதல் நாளில் மட்டும் ரூ..36 கோடி வசூல் செய்து சாதனை படைத்துள்ளது.

இதில் இந்தியில் மட்டும் ரூ.33.42 கோடிக்கும் தமிழ், தெலுங்கில் ரூ.2.80 கோடிக்கும் வசூலாகியுள்ளதாக கூறப்பட்டுள்ளது. இது இந்திப் பட உலகில் புதிய சாதனை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் படம் ரூ.300 கோடி வரை வசூலித்துக் கொடுக்கும் என்று எதிர்பார்ப்பதாக அதன் தயாரிப்பாளர் தெரிவித்தார். தூம் 3 படம் வெளியான அதே நாளில்தான் கார்த்தி நடித்த பிரியாணி படமும் ரிலீசானது என்றாலும் தூம் 3 படத்தின் வசூல் பாதிக்கப்படவில்லை என்று சினிமா வர்த்தக பிரமுகர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

## ஸ்பெஷல் நாயகி த்ரிஷா



சினிமாவுக்கு வந்து 11 ஆண்டுகள் கடந்த பிறகும் நடிப்பால் கவர்ந்து வருகிறார் த்ரிஷா. இவரைப் பற்றி ஏதேனும் தகவல்கள் வெளியான வண்ணமே உள்ளது. முன்பெல்லாம் த்ரிஷாவுக்கு கல்யாணம் என்ற பேச்சு அடிப்பட்டது, தற்போது மீண்டும் நடிக்க போகிறார் என கூறப்படுகிறது.

சமீபத்தில் வெளியான என்றென்றும் புன்னகை படம் நல்ல கமெண்ட்ஸ் வருவதால், மீண்டும் த்ரிஷாவுக்கான முக்கியத்துவம் அதிகரித்து வருகிறது.இதுகுறித்து த்ரிஷா கூறுகையில், நான் நடித்த எல்லா படங்களும் எனக்கு முக்கியமான படங்கள். என்றென்றும் புன்னகை படம் "ஸ்பெஷல்" ஆன ஒன்று.

இதில் பக்கத்து வீட்டு பெண் மாதிரி எளிமையான கேரக்டரில் நடித்துள்ளேன். வலுவான வேடத்தில் வருகிறேன், என் பாத்திரத்தை இயக்குநர் அகமது சிறப்பாக கொண்டு வந்துள்ளார்.

நகைச்சுவை படங்களில் நடிக்க எனக்கு விருப்பமாக உள்ளது, அது ஒரு மகிழ்ச்சியான அனுபவமாக இருக்கும். நல்ல கதையம்சம் உள்ள படங்களை தேர்வு செய்து நடித்து வருகிறேன் என்று தெரிவித்துள்ளார். மேலும் நேரம் கூடிவரும் போது நிச்சயம் திருமணம் செய்து கொள்வதாகவும், வாழ்க்கையை முக்கியமான ஒருவருடன் பகிர்ந்து கொள்வது இனிமையானது என்றும் தெரிவித்துள்ளார்.

## ரெட் சிக்னல் காட்டிய ரம்யா



தன்னுடைய ரகசிய காதலனுக்கு ரெட் சிக்னல் காட்டி விட்டாராம் ரம்யா நம்பீசன். தமிழில் பீட்சா, குள்ளநரிகூட்டம் போன்ற படங்களில் நடித்துள்ள ரம்யா, மலையாளம், தெலுங்கு படங்களிலும் நடித்து வருகிறார். இந்நிலையில் மலையாள நடிகர் ஒவருரை காதலிப்பதாகவும், அவரையே திருமணம் செய்து கொள்ள போவதாகவும் சில மாதங்களுக்கு முன் தகவல்கள் வெளியானது. ஆனால் அதனை மறுத்த ரம்யா, தான் ஒருவரை காதலிப்பதாகவும், காதல் திருமணத்திற்கு எதிரி இல்லை என்றும் குறிப்பிட்டிருந்தார். இந்நிலையில் பிண்னணி பாடுவதற்கும் வாய்ப்புகள் குவிந்த வண்ணம் உள்ளதால், ரகசிய காதலனுக்கு ரெட் சிக்னல் காட்டி இருக்கிறார். இப்போதைக்கு திருமணம் செய்துகொள்ளாமல் நடிப்பில் கவனம் செலுத்த முடிவு செய்திருக்கிறார்.

## அசுர வேகத்தில் "வீரம்"



வீரம் படத்தின் பாடல்கள் வெளியாகி எதிர்பார்ப்பு உச்சத்தில் இருக்க படத்தின் இறுதி கட்ட பணிகள் துரித வேகத்தில் முடிவடைந்து வருகிறது."ஆரம்பம்" படத்தின் பிரம்மாண்ட வெற்றிக்குப் பிறகு அஜித் நடித்துள்ளப் படம் "வீரம்". "சிறுத்தை" சிவா இயக்கத்தில் உருவாகிவரும் இப்படத்தில் "தல"யுடன், தமன்னா, சந்தானம், விதார்த், பாலா, அப்புக்குட்டி என பெரிய நட்ச்சத்திர பட்டாளமே நடித்துள்ளது.

விஜயா புரொடக்'ன்ஸ் சார்பில் திருமதி பாரதி ரெட்டி தயாரித்திருக்கும் இப்படம் வருகிற பொங்கல் ஜல்லிக்கட்டில் "ஜில்லா"வுடன் களமிறங்க விருப்பது நாம் அறிந்ததே.

எனவே குறித்த நேரத்தில், திட்டமிட்ட படியே படத்தின் முதல் பிரதியை இந்த வார இறுதிக்குள் கொண்டு வர இருக்கிறார் இயக்குனர் சிவா. படத்தின் சில பகுதிகளை பார்க்க நேரிட்ட சில தொழில் நுட்ப கலைஞர்கள் "வீரம்" ரசிகர்களை பெருமளவில் கவரும் ஜனரஞ்சகமான பெரிய படம் என படக்குழுவினர் கருதுகின்றனர்.

# சினிமுரசு

## ரஜினிக்கான கதையில் அஜித்



சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்துக்காக உருவான கதையில் தல அஜித் நடிக்க உள்ளாராம். ரஜினி ஒரு படத்தை முடித்த உடனே, அவரை வைத்து இயக்க முன்னணி இயக்குனர்கள் முற்றுகையிடுவார்கள்.

அப்படி செல்லும் அனைவரையும் தனது ராகவேந்திரா கல்யாண மண்டபத்துக்கு வரவைத்து மணிக்கணக்கில் சளைக்காமல் கதை கேட்பார் ரஜினி. அதில் ஒன்றை செலக்ட் பண்ணி விட்டு, மற்ற இயக்குனர்களிடம் இன்னொ?ரு முறை நாம சேர்ந்து படம் பண்ணுவே் என்று பக்குவமாக சொல்லி விடுவார்.

இதேபோன்று தான், சிகிச்சைக்காக சென்றவர் சிங்கப்பூரில் இருந்து திரும்பி போது, கே.வி.ஆனந்த் சொன்ன கதையை கேட்டார். ஆனால் இதுவரையிலும் அந்த கதைக்கு எஸ் ஆர் நோ சொல்லவில்லையாம். இதனால் காத்துக்கிடந்த கே.வி, அஜித்தை நாடியுள்ளதாக தகவல்கள் கசிந்துள்ளது. வருகிற பிப்ரவரியில் கௌதம் மேனன் படத்தை முடித்த கையோடு, கே.வி.ஆனந்த் படத்தில் நடிக்கலாம் என்றும் முணுமுணுக்கப்படுகின்றது.

## சர்ச்சைகளின் ராணியான சமந்தா



மகேஷ்பாபு பட போஸ்டரை விமர்சித்து எதிர்ப்புக்கு ஆளாகியுள்ளார் சமந்தா. மகேஷ்பாபு நடித்த "ஒன் மீ நினோக்டின்" தெலுங்கு படம் ரிலீசுக்கு தயாராகிறது. இந்த படத்தின் இசை வெளியீட்டுக்கான போஸ்டர்கள் ஐதராபாத்தில் ஒட்டப்பட்டு இருந்தன. அந்த போஸ்டரில் மகே'பாபு காலடி பின்னால் நடிகை நாய் போல் தரையில் ஊர்ந்து போவது இருந்தது.பெண்களை கேவலப்படுத்துவது போல் இந்த போஸ்டர் உள்ளது என்று டுவிட்டரில் சமந்தா கண்டித்துள்ளார். மேலும் பிற்போக்கு தனமான சிந்தனை என்றும் வர்ணித்துள்ளார். இதற்கு மகேஷ்பாபு ரசிகர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். ஆந்திராவில் இருந்து சமந்தாவை வெளியேற்ற வேண்டும் என்று அவர்கள் டுவிட்டர்களில் வற்புறுத்தி வருகின்றனர். ஆனால் இப்பிரச்சினையில் சமந்தாவுக்கு, சித்தார்த் ஆதரவு தெரிவித்து உள்ளார். கருத்து சுதந்திரம் இருப்பதற்காக தீவிரமாக பேசக் கூடாது. அப்படி கூறினால் தீவிரவாதிகள் போல் ஆகிவிடுவீர்கள். முதலில் நீங்கள்தான் வெளியேற வேண்டும் என்று

## சூப்பர் ஸ்டாரின் பாராட்டு மழை "இவன் வேற மாதிரி"



சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்தின் பாராட்டு மழையில் நனைந்துள்ளது "இவன் வேற மாதிரி". தமிழில் "எங்கேயும் எப்போதும்" படத்தை இயக்கிய சரவணன், தற்போது விக்ரம் பிரபுவை வைத்து இயக்கியுள்ள படம் இவன் வேற மாதிரி. இப்படத்தில் நாயகியாக சுரபி நடித்துள்ளார். கணேஷ் வெங்கட்ராம், வம்சி கிருஷ்ணன் உள்ளிட்ட நடிகர்கள் நடித்துள்ளனர். சத்யா இசையமைத்துள்ளார்.

இப்படத்தை காதல் மற்றும் ஆக்ஷன் கலந்த கலவையாக சரவணன் இயக்கியுள்ளார். இப்படம் தற்போது வெளியாகி ரசிகர்களிடம் பெரும் வரவேற்பை பெற்று திரையரங்குகளில் வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கும் நிலையில் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் இப்படம் குறித்து தனது கருத்தினை வெளியிட்டுள்ளார். அவர் கூறுகையில், "இவன் வேற மாதிரி" படத்தை பார்த்தேன். ஒரு கிளாஸான ஆக்ஷன் படம், இது வரைக்கும் எந்தப் படத்திலும் பார்த்திராத படத்தின் உச்சக்கட்ட காட்சிகள் பிரமிக்க வைக்கிறது என்றும் இது நல்ல பொழுதுபோக்கு படம் எனவும் கூறியுள்ளார்

## அனுஷ்காவுடன் தமன்னா



"பாகுபாலி" படத்தில் அனுஷ்காவுடன் போட்டி போட களமிறங்கியுள்ளாராம் தமன்னா.

நான் ஈ படத்திற்கு பிறகு எஸ்.எஸ்.ராஜமௌலி இயக்கி வரும் பிரம்மாண்ட தெலுங்கு படம் "பாகுபாலி'

இதில் பிரபாஸ், அனுஷ்கா, ராணா ஆகியோர் முக்கிய பாத்திரங்களில் நடிக்க, இவர்களுடன் சத்யராஜ், கோபிசந்த் முதலானோரும் நடிக்கிறார்கள். இதில் பிரபாஸ் இரு வேடங்களில் நடிக்கிறார்.

இப்படத்தில் ஒரு வேடத்துக்கு ஜோடியாக நடிக்க ஏற்கெனவே அனு'கா ஒப்பந்தமாகி நடித்து வரும் நிலையில் பிரபாஸின் இரண்டாவது கதாபாத்திரத்திற்கு ஜோடியாக நடிக்க தமன்னா ஒப்பந்தமாகியுள்ளாராம்.

ஏற்கெனவே பெரும் எதிர்பார்ப்பில் உருவாகி வரும் இப்படத்தில் இப்போது அனுஷ்காவுடன், தமன்னாவும் போட்டிப் போட்டு நடிக்க இருப்பதால் அது ரசிகர்கள் மத்தியில் மேலும் எதிர் பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.



## என்றென்றும் புன்னகை

ஜீவா,வினய், சந்தானம் மூவரும் இணைபிரியாத தோழரகளாக வளர்கிறார்களாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிமுகமாகின்றது Lamborghini Huracan



Lamborghini நிறுவனம் அண்மையில் தனது புதிய வடிவமைப்பில் உருவான Veneno Roadster கார் தொடர்பான அறிவித்தலை வெளியிட்டிருந்தது. இந்நிலையில் தற்போது Lamborghini Huracan எனும் மற்றுமொரு காரை அறிமுகம் செய்யவுள்ளதாக தெரிவித்துள்ளது. மணிக்கு 201 கிலோமீற்றர்கள் வேகத்தில் பயணம் செய்யக்கூடிய இக்காரானது 3.2 செக்கன்களில் 62 mph எனும் வேகத்தை தொடவல்லது. மேலும் இதன் அனைத்து சக்கரங்களும் என்ஜினுடன் நேரடியாக தொடர்புபட்டுள்ளது. இவை தவிர 7 வகை வேகங்களை உடைய கியர் மற்றும் டுவல் கிளச் முறைமை ஆகியவற்றினையும் கொண்டுள்ளது.

## புத்தம் புது அம்சங்களுடன் வருகிறது Oppo N1 Smart Phon



Oppo எனும் நிறுவனமானது தனது முதலாவது கைப்பேசியினை இம்மாதம் 24ம் திகதி அறிமுகப்படுத்துகின்றது. Oppo N1 CyanogenMod எனப்படும் இந்த ஸ்மார்ட் கைப்பேசியானது ஏனைய கைப்பேசிகளை விடவும் புதிய அம்சங்களைக் கொண்டுள்ளது.

விசேடமாக இதன் கமெராவது 180 டிகிரியில் சுழற்றக்கூடியவாறு காணப்படுகின்றது. இது தவிர 5.9 அங்குல தொடுதிரை, 1.7GHz வேகம் கொண்ட Snapdragon 600 Processor, 2GB RAM ஆகியவற்றினையும் கொண்டுள்ளது. இதன் விலையானது 599 டொலர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## Vivo அறிமுகப்படுத்தும் புத்தம் புதிய ஸ்மார்ட் கைப்பேசி (Photo)

Vivo நிறுவனமானது வினைத்திறன் வாய்ந்த புத்தம் புதிய ஸ்மார்ட் கைப்பேசி ஒன்றினை அறிமுகப்படுத்தியுள்ளது. 6 அங்குல அளவு, 2560 x 1440 Pixel Resolution உடைய தொடுதிரையினைக் கொண்ட Xplay 3S எனும் இக்கைப்பேசியானது 2.3GHz வேகத்தில் செயலாற்றக்கூடிய Processor மற்றும் பிரதான நினைவகமாக 3புடீ சுயுஆ ஆகியவற்றினை உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது.

Android இனை அடிப்படையாகக் கொண்ட Funtouch இயங்கு தளத்தினைக்கொண்டுள்ளதுடன், 13 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமெரா, 5 மெகாபிக்சல்களை உடைய துணையான கமெரா போன்றனவும் காணப்படுகின்றன. 32GB சேமிப்பு வசதியினைக் கொண்ட இதன் விலை 576 அமெரிக்க டொலர்கள் ஆகும்.

# விளையாட்டுப் பையன்

## நீருக்கு அடியில் பயணிக்க உதவும் அதி நவீன சாதனம் உருவாக்கம்



பிரித்தானியாவை சேர்ந்த நிறுவனமான SCP Marine Innovation நீருக்கு அடியில் வேகமாக பயணம் செய்ய உதவும் x2 Underwater Jet Packஎனும் அதி நவீன சாதனத்தை உருவாக்கியுள்ளது.

கையில் பொருத்தி பயன்படுத்தக்கூடிய இச்சிறிய சாதனத்தைக்கொண்டு இலகுவாக பயணம் செய்ய முடிவதுடன், கைகளை திருப்புவதன் மூலம் பயணிக்கும் திசையை மாற்றக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் விற்பனை விலையானது 3,500 யூரோக்களாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## இராணுத் தேவைகளுக்கான ரோபாவை வடிவமைக்கும் கூகுள்



கூகுள் நிறுவனம் தனது தொழில்நுட்பத்தினை பல்வேறு துறைகள் சார்ந்தும் பரப்பி வருவது தெரிந்ததே. இந்நிலையில் ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ள நாய், சீட்டா, காட்டுப் பூனை போன்ற வடிவங்களை உடைய ரோபோக்களை போன்று இராணுவத்தினருக்கு உதவக்கூடியதும் மிருகத்தின் உருவத்தை ஒத்ததுமான புதிய ரோபோ வடிவமைப்பில் இறங்கியுள்ளது கூகுள். இது தவிர கடந்த 6 மாதங்களில் 7 வகையான ரோபோக்களை தயாரிப்பதற்கான உரிமங்களை அந்நிறுவனம் வாங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# ஒரு கொலையின் கதை

35

(மாயன்)

**எனவே சாமானியமாகக் கேட்கும் கேள்வியொன்றை அவரிடம் அவர்கள் கேட்டனர்......**

**அக் கேள்வியால்.....**

அவர் கதிகலங்கிப் போனார்.

" அந்தக் கொலையோட உங்களுக்கு என்ன தொடர்பு....?" இது தான் அவர்கள் கேட்ட கேள்வி.

அந்தக் கேள்வியால் மொத்தமாக தடுமாறிப் போன அவர் தடாரென அந்த பேருந்துத் தரிப்பிடக் கட்டிடத்தின் உள்ளேயே நிலைதடுமாறி சரிந்திருந்தார்.

அவர் எதை எதிர்பார்த்தாரோ அத அங்கு நிகழ்ந்து விட்டது.

கத்தியை விற்ற காரணத்தினால் அவரைக் கொலையாளி யாக அவர்கள் சிந்திப்பதில் தவறேதுமில்லை என அவர் ஏற்கனவே உணர்ந்திருந்தார்...

அப்போது கர்ண கடூரமாக புலனாய்வாளர் ஒருவரின் குரல் ஒலித்தது.

" உங்களுக்குத் தெரிஞ்ச எல்லாத்தையும் சொல்லிப் போடோனும்..... இப்ப சொல்லாமல் பிறகு சொல்லுவம் எண்ட எண்ணமோ...எதையாவது ஒளிச்சு வைச்சசுச் சொல்லலாம் என்ட என்னமோ இருந்தால்... நீங்களும் குற்றவாளிச் சந்தேக நபராக் கூண்டில நிக்க வேணும்...."

"ஐயா.... நான் ஒண்டையும் ஒளிக்கேல்ல...எல்லாத்தையும் சொல்லிப் போட்டன்"

" அதவும் உண்மையா எண்டு இன்னும் கொஞ்ச நாள்ள தெரியவரும்"... உங்களுக்கு அவனை நல்லா ஞாபகம் இருக்குத் தானே.... கண்டோன்ன காட்ட ஏலுமா..?"

"என்னால ஏலும்....நான் காட்டுவன்...."

இரண்டாவது கண்கண்ட சாட்சி அவர்களின் கைகளுக்குக் கிடைத்தது.

அதன் பின்னர் புலலனாய்வு விசாரணைக்குத் தேவையான வழமையான தகவல்கள் அவரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டன. அவர் மாவட்டைத் விட்டு வெளிச் சென்றால் எங்கெங்கு செல்வார் என்பதும், அவ்வாறு செல்லும் இடங்களின் முகவரிகளும் புலனாய்வாளர்களால் சேகரிக்கப்பட்டன. அவரைத் தொடர்பு கொள்ளக் கூடிய் அனைத்து இலக்கங்களும் அவர்களின் கைகளில் இருந்தது.

மெதுவான திருப்தியொன்று அவர்களின் முகங்களிற் படர....

"ஐயா...நீங்கள் போகலாம்..." தேவையான நேரம் கூப்பிடுவம் ...அப்ப வந்தாக் காணும்... நாங்கள் விசாரிச்சதையும் நீங்கள் சொன்ன விசயங்களையும் ஆருக்கும் சொல்ல வேண்டாம்...."

"ஓம் தம்பி..."' வேறு எந்த வார்த்தைகளும் அவரிடமிருந்து வெளியாகவில்லை. தளர்ந்த நடையுடன் அவர் திரும்பிப் பார்க்காமல் தனது கடையை நோக்கிச் சென்றார்.

அவர் பொதுப்பேருந்து நிலைய நுழைவாயிலைக் கடக்கும் போது காவல்துறை வண்டியொன்று பேருந்து நிலையத்திற்குள் நுழைந்தது......

பிரதான காவல்நிலையத்தில் புலனாய்வாளர்கள் அன்றைய பணியினை நிறைவு செய்யும் நிலையில் இருந்தனர்.

இரண்டு சாட்சிகள் தயாராகி விட்டிருந்தனர்.

ஒருவர் விடுதியின் காப்பாளர். அவருக்கு சந்தேகநபர்கள் இருவரையும் நன்றாகத் தெரிந்திருந்தது. அடுத்து கத்திக் கடைக்காரர். அவருக்கு ஒரு சந்தேக நபரை மட்டும் தெரிந்திருந்தது.

அவர்கள் அடுத்து வரவழைக்கப்பட்ட கேதீஸின் தம்பியின் நண்பனுக்காக அடுத்த நாளைச் செலவழிக்க முடிவு செய்தனர்.

அன்று காலை 9 மணிக்கு அவரை வரச் சொல்லிச் செய்தி அனுப்பப்பட்டிருந்தது.

அவர் மிக காலை 8 மணி 15 நிமிடத்திற்கே காவல்துறை அலுவலகத்திற்கு வருகை தந்திருந்தார்.

அலவலக அறையொன்றுக்குள் அவரை இட்டுச் சென்றார் புலனாய்வாளர் ஒருவர். அவ்விளைஞனுடன் அவனது தகப்பனாரும் வர மயன்ற வேளையில் அதனை மிகப் பண்பாக தடுத்து நிறுத்திய புலனாய்வாளர் அவ்விளைஞனைத் தனியாக அழைத்துச் சென்றார்.

"நாங்கள் நேரடியாகவே விடயத்திற்கு வரலாம் என நினைக்கின்றோம்...."

அவ்விளைஞனிடமிருந்து எவ்விதமான பதிலும் வெளி வரவில்லை.....

"சரி...நீங்கள் கொலை நடந்த அன்று ஏன்? அந்த வீட்டிற்குச் சென்றீர்கள்...."

" என்னுடைய நண்பனை தொடருந்து நிலையத்திற்கு ஏற்றிச் சென்று விட்டுவரச் சென்றேன்..."

" நீங்கள் தான் எப்போதும் அவரைக் கொண்டு சென்று விடுவீர்களா..?"

"இல்லை... ஆனால் பெரும்பாலான வேளைகளில் நான்தான் கொண்டு சென்று விடுவேன்.... ஏனெனில் நான் அவர்களுடன் நல்ல பழக்கமானவன்... கேதீஸ் அண்ணாவையும் எனக்கு நல்ல பழக்கம்..."

"ஓஹ்... கேதீஸ் அண்ணாவையும் வடிவாத் தெரியும்.....அவர் எப்பிடி.... "

" அவர் ஒரு நல்ல அண்ணா...நல்லா ஜோக் அடிப்பார்... நல்லப் பழகுவார்... நல்ல கிறிக்கெட்டர்..." (தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஐ.நாவின் யுனிசெவ் அமைப்பின் தெற்காசிய தூதராக சச்சின் டெண்டுல்கர் நியமனம்.




சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்ற சச்சின் டெண்டுல்கர், ஐ.நா யுனிசெவ் அமைப்பின் தெற்காசிய தூதராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர், சமீபத்தில் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்றார். இந்தநிலையில் ஐக்கிய நாடுகளின் சபையின் தெற்காசிய பிரிவின் தூதராக, இரண்டு ஆண்டுகளுக்கு நியமனம் பெற்றுள்ளார்.

இதுகுறித்து சச்சின் கூறுகையில், கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்ற பின்னர் எனது இரண்டாவது இன்னிங்சை சிறப்பாக தொடங்க உதவிய யூனிசெப் அமைப்புக்கு நன்றி. இந்த தூதர் பணி எனக்கு மிகவும் முக்கியமானது, என்னால் முடிந்தளவுக்கு சிறப்பாக செயல்பட உள்ளேன்.உலகின் பெரும்பாலான சிறுவர்கள் போதிய சுகாதார வசதிகள் இல்லாமல் உள்ளனர். இதனால் ஏற்படும் நோய் பாதிப்பு காரணமாக, தினமும் 1600 சிறுவர்கள் மரணம் அடைகின்றனர் என்ற செய்தி என்னை மிகவும் பாதித்தது.எனவே இவர்களுடன் இணைந்து சுகாதாரத்தின் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த விரும்புவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# டென்னிஸ் தொடரிலிருந்து விலகுகிறார் பெட்ரோவா




ரஷ்ய டென்னிஸ் வீராங்கனை நடியா பெட்ரோவாவின் தாயார் கார் விபத்தில் இறந்ததால் அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடரில் இருந்து பெட்ரோவா விலகியுள்ளார்.

கிராண்ட்ஸ்லாம் தொடர்களில் ஒன்றான அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடர் அடுத்த ஆண்டு ஜனவரியில் நடைபெற உள்ளது. இதில் பெட்ரோவா பங்கேற்பதாக இருந்தார் ஆனால் டிசம்பர் 7ஆம் திகதி அவரது தாயார் நடே"தா இலினா விபத்தில் இறந்தமையால் பெட்ரோவா தொடரிலிருந்து விலகியுள்ளார்.

இதேவேளை ரஷ்ய வீராங்கனை மரியா கிரிலென்கோவாவும் காயம் காரணமாக அவுஸ்திரேலிய ஓபனில் பங்கேற்வில்லை. இரு வீராங்கனைகளும் தொடரில் இருந்து விலகிய தகவல் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

# ஓய்வு பெறுகிறாரா ஹர்பஜன் சிங்?



இந்திய அணியில் இடம்பெறாத காரணத்தால், ஓய்வு பெற ஹர்பஜன் சிங் முடிவு செய்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. இந்திய அணியின் சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங்(வயது 33). இதுவரையிலும் 101 டெஸ்ட் போட்டிகள்(413 விக்கெட்டுகள்), 229 ஒருநாள் போட்டிகள்(259 விக்கெடடுகள்), 25 டுவெண்டி- 20(22 விக்கெட்டுகள்) போட்டிகளில் விளையாடி உள்ளார். இவர் கடைசியாக அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் கடந்த மார்ச் மாதம் பங்கேற்றார்.

தற்போது ரஞ்சி கிண்ண போட்டிகளில் பங்கேற்று விளையாடி வருகிறார். இந்நிலையில் இந்திய அணியில் பங்கேற்று விளையாட முடியாத காரணத்தால், ஓய்வு முடிவில் உள்ளதாக கூறப்பட்டது.இதுகுறித்து அவர் கூறுகையில், ரஞ்சி கிண்ண தொடரில் பஞ்சாப் அணிக்காக முதல் இரண்டு போட்டிகளில் பங்கேற்று 17 விக்கெட் வீழ்த்தினேன், இதன் பிறகு தோள்பட்டை காயம் காரணமாக வெளியேறினேன். அவ்வப் போது காயம் தொல்லைகள் தந்தாலும், அதிலிருந்து மீண்டும் அணியில் இடம்பிடிப்பேன்.இந்திய அணியில் இன்னும் 3 அல்லது 4 ஆண்டுகள் பங்கேற்று அதிக விக்கெட் வீழ்த்த வேண்டும் என்பதே தனது எண்ணம் என்று தெரிவித்துள்ளார்.

# இலங்கை அணியின் புது முக வீரர் அசான் பிரியன்ஜன்




இலங்கை அணியில் நேற்று முன்தினம் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் அறிமுகமான அஷான் பிரியஞ்சன் அசத்தலான ஆரம்பத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

நேற்று முன்தினம் இலங்கை பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான நான்காவது ஒருநாள் போட்டியின் போது அணிக்கு ஓரளவு பலமானதொரு ஓட்டத்தை பெற்றுக்கொடுத்த பெருமை இவரையே சாரும். 93 பந்துகளுக்கு முகம் கொடுத்த அவர் 10 பவுண்ட்ரிகள் அடங்கலாக 74 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தார்.

24 வயதுடைய சுபசிங்க முடியான் சலாகே அஷான் பிரியஞ்சன் எனும் முழுப்பெயருடைய இவர் கொழும்பை பிறப்பிடமாக கொண்டுள்ளார். ரு"ஹனு, புலூம் பீல்ட் கிரிக்கெட் மற்றும் விளையாட்டுக் கழகம், இலங்கை ஏ அணி, இலங்கை 19 வயதின் கீழ் கிரிக்கெட் அணி, 20 வயதின் கீழ் இலங்கை பாடசாலைகள் அணி, தமிழ் யூனியன் கிரிக்கெட் மற்றும் விளையாட்டு கழகம், ஊவா நெக்ஸ்ட் அணிகளில் அஷான் பிரியஞ்சன் விளையாடியுள்ளார்.

சகலதுறை ஆட்டக்காரரான இவர் வலதுகை துடுப்பாட்ட வீரரும் வலதுகை வேகப்பந்து வீச்சாளருமாவார். கொழும்பு நாலந்தா கல்லூரியில் பயின்றுள்ளார்.




இலங்கை வீரர்கள் மோசமான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தி வருகின்ற நிலையில் நேற்று முன்தினம் தனது அறிமுகப்போட்டியில் அசத்தியதன் மூலம் இவர் இலங்கை ரசிகர்களின் மனங்களை வென்றிருப்பார் என்ற நம்பிக்கை எமக்கிருக்கிறது.

# பாக் எதிர் இலங்கை இறுதி ஒருநாள் போட்டி

இலங்கையுடனான ஒருநாள் தொடரை ஏற்கனவே பாகிஸ்தான் அணி 3:1 என்ற அடிப்படையில் கைப்பற்றியுள்ள நிலையில் இரு அணிகளுக்குமிடையலான ஐந்தாவதும் இறுதியுமான ஒருநாள் போட்டி வெள்ளிக்கிழமை அபுதாபியில் இடம்பெற்றுள்ளது.

சம பலம் கொண்ட இரு அணிகளுக்குமிடையில் இரண்டு இருபதுக்கு 20 போட்டி ஐந்து ஒருநாள்போட்டி மற்றும் மூன்று டெஸ்போட்டி அடங்கலான சுற்றுத் தொடர் ஐக்கிய அரபு இராச்சியத்தில் இடம்பெற்று வருகின்றது.

ஏற்கனவே இருபதுக்கு 20 போட்டி சமநிலையில் முடிந்த நிலையில் ஒருநாள் தொடரை பாகிஸ்தான் அணி வென்றுள்ளது. எனினும் 4:1 என்ற மோசமான தோல்வியிலிருந்து தவிர்த்துக் கொள்ள இன்று இலங்கை போராடும் என்று எதிர்பார்க்கலாம்.

இதேவேளை டெஸ்ட் போட்டிகள் நாளை ஆரம்பமாகவுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெல்சன் மண்டேலா நமக்கு விட்டுச்சென்ற மரபுரிமைப் பேறு

சாந்தி சச்சிதானந்தம்



**மக்கள் ஜனநாயக முன்னணி 16.12.2013 அன்று ஏற்பாடு செய்த நெல்சன் மண்டேலா ஞாபகார்த்தக் கூட்டத்தில் ஆற்றிய உரையின் சென்ற வாரத் தொடர்ச்சி**

கொண்டு செல்வதாகும். இதற்காக உம்கொன்டோ வீ சிஸ்வி என்னும் ஆயுதப்படையினை உருவாக்கி அதற்குப் பயிற்சிகள் கொடுப்பதற்கும் அவர்களை வெளிநாட்டு முகாம்களிலிருந்து நாட்டுக்கள் கடத்துவதற்குமான திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. தென்னாபிரிக்க மக்களின் போராட்டத்திற்கு ஆதரவுத் தளமாக ஆபிரிக்க கண்டத்தின் சகல நாடுகளிலுமுள்ள கறுப்பின மக்களை உருமாற்றுவது மூன்றாவது மூலோபாயத் தூணாகியது. இவர்கள் மூலம் போராட்டத்திற்குத் தேவையான நிதி மற்றும் மனித வளங்களைத் திரட்டுதல், ஆயுதப்படைகளுக்கான பயிற்சி முகாம்களைத் தாபித்தல் போன்றன திட்டமிடப்பட்டன. நான்காவது தூணாக, சர்வதேச சமூகத்தின் ஆதரவினை நாடுதல் குறிக்கப்பட்டது. தென்னாபிரிக்க அரசாங்கத்துக்கெதிரான பொருளாதாரத் தடைகளை விதிக்கச் செய்தல், அந்நாட்டின் உற்பத்திப் பொருட்களுக்கான சந்தையைக் குறுக்குதல், அதன் கலாசார விளையாட்டு பரிவர்த்தனைகளைத் தடுத்து சர்வதேச ரீதியாக அதனை ஓரங்கட்டுதல், அது தீர்வுக்கு வருவதற்கான அழுத்தங்களைப் பிரயோகிக்க வைத்தல் போன்ற நடவடிக்கைகள் இதன் கீழ் திட்டமிடப்பட்டன. இந்த ஒவ்வொரு தூணுக்கும் தேவையான பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ளும்பொருட்டு ஊடக அணிகள் நிறுவப்பட்டன. விசேடமாக, சர்வதேச ரீதியாக ஆதரவுத் தளத்தை நிறுவுவதில் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் ஈட்டிய வெற்றி மகத்தானதாகும். ஐரோப்பிய நாடுகளில் இருந்த சுப்பர் மார்க்கட்டுக்களிலும் ஏனைய கடைகளிலும் தென்னாபிரிக்காவில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களெல்லாம் தேங்கிக் கிடக்க ஆரம்பித்தன. தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியும் கால்பந்தாட்ட அணியும் எந்த நாட்டிலும் விளையாட முடியாது என்கின்ற நிலை ஏற்பட்டது. உண்மையில் இந்தப் பொருளாதாரத் தடை கடிக்கத் தொடங்கியபோதுதான் அரசு பேச்சுவார்த்தைக்கு இறங்கி வந்தது எனக் கூறலாம்.

இன்று எங்கள் அரசியலில் எது எமது மூலோபாயம் எனக் கேட்டாலோ அதற்குத் தெளிவான பதில் கிடைக்குமா என்பது சந்தேகந்தான். எமது கட்டுப்பாட்டிலில்லா சக்திகள் கோள அரசியலில் தொழிற்பட்ட தன்மையினால் தற்செயலாக எமக்கு இன்று சர்வதேசத்தின் பார்வை கிட்டியிருக்கின்றது. ஆனால் இந்த அனுகூலமான சூழ்நிலையினை உபயோகிக்கவும்கூட தெளிவான மூலோபாயம் தேவையாகும். இதுதான் நாம் கற்றுக்கொள்ளும் இரண்டாம் பாடமாகும்.

ஜனநாயக நடைமுறைகள் உச்சி முதற்கொண்டு அடிமட்டம்வரை நிலை நிறுத்தப்பட வேண்டுமென்று நெல்சன் மண்டேலாவும் அவர் சக தலைவர்களும் உறுதியாக நின்றதுதான் அவர் மூன்றாவதாக எமக்குக் கற்றுத் தந்த பாடமாகும். தனது பயங்கரவாத வழக்கில் சுதந்திரத்துக்கும் சமத்துவத்துக்கும் ஜனநாயகத்துக்குமாக அறைகூவல் விடுத்தார் மண்டேலா. ஆனால் வாய்ப் பேச்சுடன் அவரோ அவருடைய தோழர்களோ நின்றுவிடவில்லை. தமது கட்சிக்குள்ளும் கட்சியின் நடவடிக்கைகள் யாவற்றிலும் ஜனநாயகப் பண்பாட்டினைப் புகுத்தினர். முதலாவதாக, 1955ம் ஆண்ட ஒரு சுதந்திரப் பட்டயத்தினை வரைந்தனர். இப்பட்டயமானது ஒரு சுதந்திரமான தென்னாபிரிக்காவைப் பற்றி தரிசனத்தினையும் அதனைக் கொண்டுதரும் வாகனமான ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் கட்டமைப்புக்களைப் பற்றியும் வரையறுத்தது. அன்றைய தென்னாபிரிக்காவில் 75வீதத்துக்கு மேற்பட்ட கறுப்பின மக்கள் எழுத வாசிக்கத் தெரியாதிருந்த காரணத்தினால், காங்கிரஸின் தொண்டர்கள் இந்த சாசனத்தினை ஊர் ஊராகவும் வீடு வீடாகவும் கொண்டு சென்று மக்களுக்கு வாசித்து விளக்கினர். ஒரு ஜனநாயக ஆட்சியினை ஆதரிக்கும் மக்களின் அடித்தளம் இங்குதான் நாட்டப்பட்டது எனலாம்.

ஆபிரிக்கத் தேசியக் காங்கிரஸ"க்குள்ளும் பல தலைமைத்துவங்களும் தலைமை மையங்களும் உருவாக்கப்பட்டன. எமக்கு நெல்சன் மண்டேலா மட்டுமே அதன் முகமாகத் தெரிகின்றார். ஆயினும் ஒலிவர் டம்போ, வோல்டர் சிசுலு, ஜோ ஸ்லோவோ எனப் பல மாமனிதர்கள் அதனை நடத்திச் சென்றனர். எந்த சந்தர்ப்பத்திலும் கூட்டாகத் தீர்மானங்கள் எடுப்பதை திரு மண்டேலா அவர்கள் கொள்கையாக நடத்திச் சென்றார். ஒரு கூட்டமைப்பாக இயங்கிய ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ் ஓரளவுக்கேனும் உடைந்து சிதறாமல் இருந்ததற்கு இது பிரதான காரணமாகும். அடுத்து, 1985ல் வெள்ளையின அரசாங்கம் தாபித்த கறுப்பின உள்ளூராட்சி மன்றங்களை இல்லாதொழிக்கும் போராட்டத்தினை காங்கிரஸ் ஆரம்பித்தது. எமது நாட்டிலுள்ளதைப் போலவே மத்திய அரசாங்கத்தின் கைப்பொம்மையாக இயங்கும் தலைவர்களை வைத்துக்கொண்டு உள்ளூராட்சி மன்றங்களினூடாக அதிகாரப் பரவலாக்கப்பட்டு விட்டது என்கின்ற மாயையை உருவாக்கி வைத்திருந்தது அவ்வரசு. இந்தக் கட்டமைப்புக்களைச் சிதைத்து, அவற்றின் இடத்தில் வீதிக் குழுக்கள், கிராம சபைகள், மக்கள் நீதி மன்றங்கள் போன்ற ஜனநாயகபூர்வமான அமைப்புக்களை நிறுவி, ஓர் ஜனநாயக ஆட்சியின்போது சமூகம் எவ்வாறு இயங்கக் கூடும் என்பதனை மக்களுக்கு அனுபவ ரீதியாக உணர்த்தியது காங்கிரஸ்.

இக்கட்சி இவ்வாறு கைக்கொண்ட இம்முறைவழியானது பின்னாளில் இரு பெருஞ் சாதனைகளை அம்மக்கள் ஈட்டுவதற்கு இட்டுச் சென்றது எனக் கூறலாம். முதலாவது சாதனையாக, அவர்கள் உருவாக்கிய புதிய அரசியலமைப்புச் சட்டத்தினைக் கூறலாம். புதிய அரசியலமைப்புச் சட்டம் தேவை என்று வந்தபோது, எங்கள் நாட்டில் நடப்பதைப் போல் நான்கு சட்டத்தரணிகள் கூடி சில அரசியல்வாதிகளின் வழிகாட்டலின் அடிப்படையில் சட்டங்களை உருவாக்கவில்லை. ஒரு நாட்டின் இறைமை மக்களில்தான் பொதிந்திருக்கின்றதெனவே மக்களால் உருவாக்கி வழிநடத்தப்படுவதுதான் அரசியலமைப்புச் சட்டம் என்பதனை செயல் ரீதியாக நிறுவினர். கிட்டத்தட்ட நான்கு வருடங்களுக்கூடாக, ஒவ்வொரு பிரதேசமாகவும் வட்டாரமாகவும், அங்குள்ள பெண்கள் அமைப்புக்கள் தொழிற்சங்கங்கள் இனக்குடிகள் போன்றோரின் பிரதிநிதித்துவத்துடனான குழுக்களை நிறுவி, தமது நாட்டின் அரசியல் யாப்பினைக் கலந்துரையாட வைக்கப்பட்டனர். இவர்கள் யாவரினதும் கருத்துக்கள் தொகுக்கப்பட்டே இன்று தென்னாபிரிக்காவின் அரசியலமைப்புச் சட்டம் வரையப்பட்டிருக்கின்றது. மிக எளிய மொழி நடையில் தரப்பட்டிருக்கும் அதனை அதனை வாசித்துப் பார்த்தால் மக்களுக்காக மக்கள் எழுதிய ஆவணம் இது எனப் புரியும்.

அடுத்த சாதனை தென்னாபிரிக்காவின் இடைக்கால அரசாங்கம் செயற்படுத்திய உண்மையும் நல்லிணக்கமும் ஆணைக்குழுவின் (Truth and Reconciliation) அமர்வுகளாகும்.

நீண்டகாலமாக கொடூரமான வன்முறைகளைச் சந்தித்த மக்கள் மத்தியில் உண்மையை வெளிப்படுத்தினாலன்றி அங்கு நல்லிணக்கம் காண்தல் அரிது என்னும் கோட்பாட்டின் அடிப்படையிலேயே இது தாபிக்கப்பட்டது. நாம் சமீபத்தில் போரில் கணவரை இழந்த பெண்களுக்கான மாநாட்டினை நடத்தினோம்.

அம்மாநாட்டில் ஒரு பெண் வந்து "நான் இந்தக் கையால நல்ல சுகமா இருந்த என்ட கணவரை இராணுவத்துக்கு ஒப்படைத்தனான். அவருக்கு என்ன நடந்தது?." என்று குழறி அழுதார் அந்தப் பெண்ணுக்கு தனது கணவனுக்கு நடந்த உண்மையை அறியும் வரை, அதற்கான மன்னிப்பினை அவர் வழங்கும்வரை ஏது நல்லிணக்கம்? இதனால்தான் நாடெங்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கிடையேயும் பாதிப்பினை ஏற்படுத்திய வர்களுக்கிடையேயுமான சந்திப்புக்களை இந்த ஆணைக்குழு ஏற்படுத்திக் கொடுத்தது.

மிக உணர்ச்சி பூர்வமான சம்பவங்கள் இங்கு நிகழ்ந்தேறின. முழுமையான ஒப்புதல் வாக்குமூலத்தினை அளித்தால் தண்டனையின்றித் தப்பலாம் என்கின்ற வாக்குறுதி இவ்வாணைக்குழு மூலம் அளிக்கப்பட்ட காரணத்தினால், இராணுவத்திலும் ஆயுதக்குழுக்களிலும் பணி புரிந்த பலர் தம்மால் பலியானவர்களின் குடும்பங்களுக்கு முன்னால் உண்மையை உரைக்கக் கண்டனர். கண்ணீரின் மத்தியில் இந்த அமர்வுகள் நடந்தேறின. புழிவாங்கல்கள் இன்றி ஒரு புதிய நாட்டினைக் கட்டியெழுப்பவும் இது வகைசெய்தது. ஒருபுறம் நெல்சன் மண்டேலா போன்ற தூரதரிசனம் மிக்க தலைவர்களின் அரசியல் தலைமைத்துவமும், மறுபுறம் நீண்ட வருடங்களுக்கூடாக ஜனநாயகக் கல்வி ஊட்டப்பட்ட மக்கள் சமூகம் இருந்ததும் இந்த அற்புதமான முறைவழியினை அந்நாட்டினர் செயற்படுத்த வழிசெய்தது. இதிலிருந்து, விடுதலைக்கும் உரிமைகளுக்குமாகப் போராடும் மக்கள் மத்தியில் ஜனநாயகம் பற்றிய கல்வி ஊட்டப்பட்டு அந்நடைமுறைகளுக்கு அவர்கள் பரிச்சயப்படவேண்டியது அவசியம் என்பது எமது மூன்றாவது பாடமாகின்றது.

எங்கள் நாட்டிலும், அப்படியான தலைமைத்துவங்கள் மூலம் இப்படியான சாதனைகளை நாம் படைக்கலாம். ஆனால் சபையோரே, தலைவர்கள் வானத்திலிருந்து குதித்து வருபவர்களல்ல, எம்மால், எமது சமூகத்தினால;" உருவாக்கப் படுபவர்கள். சர்வதேச சமூகம் இன்று எமக்கு ஆதரவாகச் செயற்படுகின்றதெனினும் அந்தக் காரணி மட்டுமே போதாது. எமது சமூகத்திற்குள்ளேயும் உரிமைக்கான போராட்டங்கள் மலர வேண்டும். அப்போராட்டத்திற்குத் தேவையான தலைமைத்துவங்களை நாம்தான் இனம் கண்டு ஆதரிக்க வேண்டும். ஐயோ எங்கள் முன்னால் இவ்வளவுதான் இருக்கின்றது என்று கூறிவிட்டு சும்மா இருக்க முடியாது.

எனவே, நெல்சன் மண்டேலாவின் வாழ்க்கை தந்த பாடங்களைக்கொண்டு இன்றிலிருந்து ஒரு புதிய அரசியல் பாதையை நாமும் வகுக்கவேண்டும் எனக் கூறிக்கொண்டு என்னை இங்கு பேச அழைத்ததற்கு நன்றி கூறி எனது உரையை முடிக்கின்றேன்.



\- நன்றி -

உலகத் தமிழ் செய்திகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலத்திற்காகப் போராடும் தென்னமரவாடி மக்கள்

தமிழ் மக்களை இலங்கைத் தீவிலிருந்து ஒழிப்பதற்கான பல்வேறு வேலைத் திட்டங்கள் தொடர்ந்தும் நிகழ்ந்து கொண்டேயிருக்கிறது.

கிராமங்களுக்கு அடிப்படை வசதிகள் எதனையும் செய்து கொடுக்காமல் புறக்கணித்தால் அந்தக் கிராமங்களை விட்டு மக்கள் வேறு எங்காவது இடம்பெயர்ந்து செல்லுவார்கள் என்று அந்த அமைப்பு நினைக்கின்றது.

மக்களை இடம்பெயரச் செய்யவும் நிலத்தை அபகரிக்கவும் இதுவும் ஒரு உபாயமாக கையாளப் படுகின்றது. ஏனெனில் மக்கள் தமது வாழ்வாதாரத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளுவதற்காகவும் ஒரு இடத்தை விட்டு இன்னொரு இடத்திற்கு நகர்கின்றார்கள்.

அடிப்படை வசதிகள் ஏதுவும் இல்லாத ஒரு கிராமமாககவும் நில அபகரிப்புக்கு முகம் கொடுக்கும் கிராமமாகவும் பெருந்துயரத்திற்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கிறது தென்னைமரவாடிக்கிராமம்.

திருகோணமலை மாவட்டத்தில் குச்சவெளிப் பிரதேச செயலாளர் பிரிவில் இருக்கிறது தென்னை மரவாடிக்கிராமம். கிழக்கு மாகாணமும் வடக்கு மாகாணமும் இணையும் இடத்தில் உள்ள இந்தக் கிராமத்தின் மறுபுறத்தில் கொக்கிளாய் காணப் படுகிறது.

கொக்கிளாய் நீரேரியும் பறையானாறும் வடக்கையும் கிழக்கையும் இணைக்கின்றன. இவைகளின் கரையோரமாக தென்னைமரவாடிக் கிராமம் இருக்கின்றது. தென்னவன் என்ற தமிழ் அரசன் இந்தக் கிராமத்தை ஆண்டதினால் தென்னவன் மரபு வந்த அடி என்பதனால் தென்னைமரவாடி என்ற பெயர் இந்தக் கிராமத்திற்கு ஏற்பட்டிருக்கிறது.

காலம் காலமாக இந்தக் கிராமத்தில் மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். இது நீண்ட நெடிய வரலாறு கொண்ட ஒரு பூர்வீகக் கிராமம்.

முன்னொரு காலத்தில் மக்கள் மகிழ்வும் வளமும் கொண்டதொரு வாழ்வை வாழ்ந்து வந்தார்கள். இக்கிராமத்தின் ஒரு பகுதி மணலாறுடன் தொடர்புபடுகின்றது. மணலாற்றுப் பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

அங்கிருந்த சிங்களக் காடையர்கள் 1983 மார்கழி 3ஆம் திகதி அன்று இந்தக் கிராமத்தினுள் நுழைந்து இனக்கவலரவங்களை நிகழ்த்தினார்கள். 14பேர் அந்தக் கலவரத்தில் கொல்லப்பட்டார்கள்.

மூன்று பெண்கள் பாலியல் பலாத்காரத்திற்கு உட்பட்டு கொல்லப் பட்டார்கள். பலர் கடத்திச் செல்லப் பட்டுச் சித்திரவதை செய்யப்பட்டார்கள். ஈழப் பிரச்சினையில் முதலில் இடம் பெயர்ந்த ஒரு கிராமம்தான் தென்னை மரவாடி.

இந்தக் கிராமத்தில் இனக் கலவரம் நடந்த அன்றைய நாளில் நடந்ததை இன்னும் மறக்க முடியாது இருக்கிறார்கள் மக்கள். சந்திக்கும் ஒவ்வொருவரும் அதைக் குறித்துப் பேசுமளவில் அந்தக் கொடுமைகள் ஆழமாக நெஞ்சில் படிந்திருக்கின்றன.

கிராமத்தின் மக்கள் தேடித் தேடி வெட்டிக் கொல்லப்படும்பொழுது 18 நாட்கள் காட்டுக்குள் பதுங்கி கிடந்து கொக்குத்தொடுவாயிற்குச் சென்று முல்லைத்தீவுக்குச் சென்ற இந்தக் கொடிய நாட்களை மக்கள் நினைவுகூர்ந்தார்கள்.

அன்று இந்தக் கிராமத்தை விட்டு துரத்தப்பட்ட மக்கள் 2010 ஆண்டிலேயே மீள்குடியேற அனுமதிக்கப்பட்டார்கள். மீள்குடியேற அனுமதிக்கப்படாமல் . இருந்த நிலையில் மக்களாகவே வந்து மீள்குடியேறியுள்ளனர்.

இனக்கலவரக் கொலைகளை இன்னமும் மறக்க முடியாத அளவிலேயே நிகழ்கால நிலமைகளும் காணப்படுகின்றன. இந்த மக்கள் கிராமத்தை விட்டு துரத்தப்பட்ட நாட்கள் முதல் அருகில் குடியேற்றப்பட்ட சிங்களக் கிராம மக்கள் இந்த மக்களின் வயல்நிலங்களில் வந்து பயிரச் செய்கையில் ஈடுபடுகிறார்கள்.

தென்னைமரவாடிக் கிராமத்தின் ஒட்டுமொத்த நிலங்களையும் அபகரிப் பதற்காகவே இந்தக் கிராமத்தின் மக்கள் மீள்குடியேற்றப்படா திருந்தார்கள். எனினும் தாமாகவே மக்கள் மெல்ல மெல்ல வந்து மீள்குடியேறினார்கள்.

அமைப்பொன்று எல்லைகளில் உள்ள தமிழ் கிராமங்களை தொடர்ந்தும் ஆக்கிரமிப்பதற்கு முயற்சித்து வருகிறது. அதனால் அந்தக் கிராமங்களுக்கு எந்த விதமான அடிப்படைவசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்காமல் அதனையே ஒரு நடவடிக்கையாகவும் ஒடுக்கு முறையாகவும் செய்கிறது.

இந்தக் கிராமத்தையும் இன்னொரு மெனிக்பாம் என்றே சொல்வேன். பார்க்கும் இடமெல்லாம் தொண்டு நிறுவனம் அமைத்துக் கொடுத்த தற்காலிக குடிசைகள்தான் தெரிகின்றன. பெரும்பாலான குடிசைகள் இப்பொழுதே பிய்ந்திருக்கின்றன.

காற்றும் மழையும் இழுத்துச் செல்லும் இந்தக் கூடாரங்களில்தான் தென்னைமரவாடிக் கிராம மக்கள் கடந்த 2010 முதல் குடியிருந்து வருகிறார்கள். இந்த மக்களின் வீடுகளை அழித்தொழித்து இந்த மக்களுக்கு ஒதுக்கப்பட்ட வீட்டுத் திட்டங்களும் சுருட்டிக் கொண்டுள்ளது. ஒரு நிரந்தரமான வீடு அல்லது ஒரு பலமான வீட்டைக்கூட இந்தக் கிராமத்தில் காணமுடியவில்லை. போராலும் இனக்கலவரத்தாலும் பாதிக்கப்பட்ட இந்த மக்கள் கூடாரங்களில் தவிக்க அருகில் உள்ள 13ஆம் கொலனியில் குடியேற்றப்பட்ட போரால் எந்தப் பாதிப்புகளுக்கும் முகம் கொடுக்காத பெரும்பான்மையின மக்களுக்கு இந்திய வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. 30 ஆண்டுகள் மக்கள் இல்லாமல் காடு மண்டிய இந்தக் கிராமத்தின் இரவுப் பொழுதுகளை இப்பொழுது யானைகளே ஆழ்கின்றன.

இரவாகியதும் வீட்டைவிட்டு வெளியில் வர முடியாத அளவுக்கு யானைகள் நுழைந்து மக்களிடம் உள்ள தற்காலிக வீடுகளையும் உடைத்துப்போடுகின்றன. இந்த யானைகளை நினைத்தே உறையும் இரவுகளுடன் இந்த மக்கள் வசிக்கின்றார்கள். அண்மையில் ஒரு சிறுவனுக்கு நடு இரவில் சுகவீனம் ஏற்பட்டது. அவனை வைத்தியசாலைகசு கொண்டு செல்ல முடியாத நிலையில் யானைகள் சூழ்ந்துவிட்டன. அதிகாலையில் 13 வயதான அச்சிறுவன் இறந்துபோனான்.

மணலாறில் உள்ள ஜனகபுர, சிங்கபுர, 13ம் கொலனி முதலிய சிங்களக் கிராமங்களுககு வரும் மின்சார இணைப்புக்கள் இந்தக் கிராமத்தையும் ஊடறுத்துச் செல்கின்றது. ஆனால் இந்தக் கிராம மக்களுக்கு மின்சாரம் வழங்கப்படவில்லை.

இந்தக் கிராமம் எல்லா வகையிலும் புறக்கணிக்கப்படுகிறது. இந்தப் புறக்கணிப்பிற்குப் பின்னால்பெரும் அரசியல் உள்ளமை உள்ளது. அதில் ஒன்று இந்த மக்களின் காணிகளைப் பறிக்க முற்படும் திட்டம். வயல் இல்லாமல் வாழ்வில்லை என்று சொல்ல வேண்டும். இந்தக் கிராம மக்களின் வயல்கள் இப்பொழுது இவர்களிடம் இல்லை. இந்த மக்கள் அந்த வயல் நிலங்களுக்காகவே இப்பொழுது வாழும் ஒரு போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

தென்னைமரவாடி, கொால்லைவெளி, துவாரமுறிப்பு என்று மூன்று குளங்கள் அடங்கப் பெற்ற கிராமத்தில் சுமார் 800 ஏக்கர் நிலப்பரப்பு இன்று இந்த மக்களுக்கு அவர்களின் பூர்வீக வயல் நிலம் மறுக்கப்பட்டிருக்கிறது. காலம் காலமாக பூர்வீகமாக வயல் விதைத்து வந்த இந்தக் காணிகளை 1983இற்குப் பின்னர் விதைத்து வந்தவர்கள் தொடர்ந்தும் விதைத்து வருகின்றனர். 2010ஆம் ஆண்டு மக்கள் மீள்குடியேறிய பின்னர் கடந்த மூன்று வருடங்களாக தமது வயல் நிலத்தை தம்மிடம் ஒப்படைக்குமாறு கோருகின்றார்கள். அடுத்த வருடம் அடுத்த வருடம் என்று சொல்லி ஒவ்வொரு ஆண்டும் வயல்களை ஆக்கிரமித்துக் கொள்கிறார்கள்.

பனிக்கவயல் சந்தியில் ஒரு தெரு மணலாறு வழியாக முல்லைத்தீவுப் பக்கம் செல்கிறது. இன்னொரு புல்மோட்டைப் பக்கம் செல்கிறது. பனிக்கவயல் சந்தியிலிருந்து தெனனைமரவாடிச் சந்தி வரை உள்ள வயற்காணிகளை இவ்வாறு அபகரிக்கப்பட்டுள்ளன. மக்கள் இல்லாமல் காடாக இருந்த இடங்கள் இப்பொழுது குடியேற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. கடந்த மூன்று வருடங்களாக வயல் நிலத்திற்கான போராட்டம் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. தென்னைமரவாடி மக்கள் விதைப்பதற்காக உழுதுவிட்டு வந்தால் மறுநாள் காலையில் சிங்களவர்கள் விதைத்து விடுகின்றார்கள் அல்லது தென்னைமரவாடி மக்கள் உழுது விதைத்த நிலத்தை மீண்டும் உழுது விதைத்து வருகின்றார்கள்.

இந்த நிகழ்வுகள் 30 வருடங்களாக அகதிகளாக நொந்த நிலத்தை இழந்து எங்கெங்கோ எல்லாம் அலைந்த மக்களை கடுமையாக நோகடிக்கின்றது. இந்த மக்களை இந்தப் பகுதியை விட்டு துரத்தவே இவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதை அறிந்த மக்கள் இதை எதிர்கொண்டே தமது போராட்டத்தை முன்னெடுக்கின்றனர்.

ஒடுக்குமுறை இந்தக் கிராமத்திலும் உள்ளது. காணிக்குள் இறங்கவேண்டாம் என்று காவல் துறை கட்டளையிட்ட நிலையில் சிங்களவர்கள் இறங்கி வயல் விதைக்கின்றார்கள்.

இந்தப் பகுதிக்கு ஒருமுறை வருகை தந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா சம்பந்தன் உரியவர்கள் இருந்தால் இப்படி எல்லாம் செய்வார்களா? அவர்கள் இல்லாத காரணத்தால்தான் இப்படியெல்லாம் செய்கின்றார்கள் என்று பேசியதாக மக்கள் சொன்னார்கள். மின்சாரம் இல்லாமல் இருளில் மூழ்கிய இந்தக் கிராமத்திற்கு திருமலையிலிருந்து மின்சாரம் எடுத்துதருவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன் என்று சம்பந்தர் கூறி அன்றிரவே சிங்களத்தில் முற்று முழுதாக எழுதப்பட்ட மின்சார பிரதான இணைப்பு கல்வெட்டு ஒன்று திறக்கப்பட்டது. ஆனால் மின்சாரம் வரவில்லை.

1983இல் இடம் பெயரும் பொழுது இந்தக் கிராமத்தில் சுமார் 450 குடும்பங்கள் வசித்திருக்கின்றன. தற்பொழுது வெறும் 150 குடும்பங்களே திரும்பியிருக்கின்றன. நிலத்தை இழந்து வடக்கு கிழக்கு மாத்திரமின்றி பலர் வெளிநாடும் சென்றுவிட்டனர். லண்டனில் ஏழு வருடங்கள் வசித்துவிட்டு இந்த கிராமத்திற்குத் திரும்பியிருக்கிறார் விநாயகம். அவரின் ஒரு மகள் கனடாவிலும் ஒரு மகன் லண்டனிலும் வசிக்கின்றனர். அம்மா பிறந்து வளர்ந்த இடம். அம்மாவுக்கு அவர்களின் மூதாதையர்கள் கொடுத்த நிலம். இதை எப்படி விட்டுவிட்டு வசிப்பேன் என்று குறிப்பிட்டார். விநாயகம். தற்காலிகமான அவரது வீட்டின் நடுவில் அம்மாவின் படத்தை மாட்டியிருப்தை காட்டினார். வேறு எதுவும் வேண்டாம் எங்களுக்கு இந்த நிலம் மட்டுமே வேண்டும் என்பதுதான் இந்தக் கிராம மக்களின் குரலாக இருக்கிறது.

இந்த ஊரில் இடிந்து போன பின்னரும் இன்னமும் தொன்மையை உணர்த்தும் கட்டிடங்களுடன் இருக்கிறது கோயில் கட்டிடம். கொட்டடி கந்தசுவாமி கோயில் எனப்படும் இந்தக் கோயிலை திருத்தும் பணிகள் நடந்து வருகின்றன. மிகவும் தென்மை வாய்ந்த இக் கோயில் பல நூறு வருடங்களின் முன்பாக அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த ஊரில் உள்ள சில கிணறுகள்கூட அவ்வாறு பழமைய மிகுந்த கட்டிட கலையால் அமையப்பெற்றிருக்கிறது. கிரமாத்தில் பழைய வீடுகளில் எஞ்சியிருந்து இரண்டு வீடுகளின் சுவர் மாத்திரமே. அதில் ஒரு வீட்டுக்குச் சொந்தக்காரர்கள் விரைவில் நாடு திரும்ப இருக்கிறார்கள். வெளிநாடு ஒன்றிற்கு புலம்பெயர்ந்த அவர்கள் இந்தக் கிராமத்திற்கே திரும்புகிறார்கள்.

இன்று எங்களுக்காக கேக்கிறதுக்கு ஆட்கள் இல்லை என்பதுதான் இச்சனங்களின் நெஞ்சில் பெருந்துயரமாய் இருக்கின்றது. திருமலை நகரத்திலிருந்து சுமார் 100 கிலோமீற்றர் தூரத்தில் உள்ளது தென்னைமரவாடிக் கிராமம். முல்லை நகரத்திலிருந்து கொக்கிளாயின் எதிர் கரையில் இருந்தாலும் மணலாற்றின் வழியாக வரும் தரைவழிப்பாதை ஊடாகவே தென்னைமரவாடிக் கிராமத்திற்கு வர வேண்டும். நகரங்களுக்கும் பெரு வழிகளுக்கும் மிகத் தொலைவில் உள்ள இந்தக் கிராமத்தின் கைவிடப்பட்ட ஒடுக்குமுறை மிகுந்த காட்சி என்பது ஈழத் தமிழர்கள் எதிர்கொள்ளும் மாபெரும் துயரத்தின் குறுக்குவெட்டு முகமாகவே தெரிகிறது.

இந்தக் கிராம மக்களின் வயல் நிலங்களை மீட்பது மிகவும் அவசியமானது. வயல் நிலங்கள் இல்லாவிட்டால் இந்த மக்களுக்கு தொழிலோ வருமானோ இருக்காது. அதனால் இந்த மக்கள் இந்த இடத்தைவிட்டு இடம்பெயர நேரிடும். இந்த மக்களின் வயல்நிலங்களை அபகரிப்பவர்களின் நோக்கமும் அதுவே. தமது வாழ் நிலத்திற்காவும் வயல் நிலத்திற்காகவும் போராடும் தென்னைமரவாடிக் கிராம மக்களுக்காக அவசியமாகவும் அவசரமாகவும செயலாற்ற வேண்டும்.

குளோபல் தமிழ்
செய்திகளுக்காக பார்த்தீபன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழின நலனுக்கான.....

வடக்கு, கிழக்கு உறுப்பினர்கள் அனைவரும் தொடர்ந்து ஒன்றுபட்டு இவ்வாறான தீர்மானங்களை எடுத்தால் அரசின் சதி வலைக்குள் விழாமல் இருக்கமுடியும்.

தமிழர்களைப் புறந்தள்ளி அவர்களின் இருப்பிடங்களை ஆக்கிரமித்து அவர்களின் கருத்துக ளுக்கும் சர்வதேச சமூகத்தின் அறிவுரை களுக்கும் செவிசாய்க்காமல் தன்னிச் சையாக செயற்பட்டு வரும் இலங்கை அரசு, நாட்டின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு திருந்தவேண்டும். அப்போதுதான் இந்த அரசில் தமிழர்களுக்கும், சர்வதேச சமூகத்துக்கும் நம்பிக்கை ஏற்படும் தமிழர்களின் பிரதிநிதிகளான கூட்டமைப்பும் அரசுடன் பேச முன்வரும்" என அவர் மேலும்

## புலமைப் பரிசில்........

விமரிசனம் செய்துள்ள இலங்கை ஆசிரியர் சங்கம் இத்தடையானது விறள் மிக்க சிறுவர்கள் பெயர் படைத்த பாடசாலைகளில் 6ம் ஆண்டு முதல் கல்வி கற்பதற்குக் கிடைக்கும் வாயப்பைப் பறித்து விட்டுள்ளது எனக் குற்றம் சாட்டியுள்ளது.

தற்போது மக்கள் விடுதலை முன்னணியின் ஸ்ரீலங்கா மாக்ஸிஸ்ட் கட்சியும் தனது பங்கிற்கு இத்தடைக்கு எதிராகக் குறைகூறத் தொடங்கியுள்ளது. அக்கட்சியின் அங்கத்தவரும் ஆளுங்கட்சியின் அமைச்சருமான குணவர்த்தன "கல்வி அமைச்சர் புலமைப் பரிசிற் பரீட்சையை நிறுத்துவதற்கான தீர்மானத்தை மேற்கொள்ளும் போது ஏழை, எளியவர்கள் பெற்றுக்கொள்ளும் நன்மைகளைக் கருத்திற்கொள்ளவில்லை என்றும் அவர்களின் குழந்தைகள் பிரபல்யமான பாடசாலைகளில் கல்வி கற்கக் கிடைக்கும் வாய்ப்பை இழப்பதைக் கவனத்திற் கொள்ளவில்லை என்றும் குற்றஞ்சுமத்தியுள்ளார்.

## இலங்கையில் முன்னேற்றம் உண்டா? மதிப்பாய வருகின்றார் நிஸா தேசாய்

இலங்கை மீது கடந்த மனித உரிமைக் கூட்டத்தொடரில் அமெரிக்க ஆதரவுத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. அத்தீர்மானத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்களை அரசு செயற்படுத்தியுள்ளதா என்பதை மதிப்பாய்வு செய்வதற்காக தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் நிஸா தேசாய் பிஸ்வாலை, அமெரிக்கா அடுத்த மாதம் இலங்கைக்கு அனுப்பவுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் பேரவையின் மார்ச் மாத அமர்வுக்கு முன்னர் இந்த மதிப்பாய்வினை மேற்கொள்ளும் நோக்கத்திலேயே புதிதாக நியமனம் பெற்றுள்ள உதவிச் செயலாளர் நிஸா தேசாயை அமெரிக்கா அனுப்பவுள்ளது.

ஜனவரி இரண்டாம் வாரத்தில் இலங்கை வரவுள்ள நிஸா தேசாய், அரசாங்க மற்றும் எதிர்க்கட்சி பிரமுகர்களுடன் பேசவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்க அனுசரணையில் இலங்கை தொடர்பாக ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் கடந்த மார்ச் மாதம் கொண்டுவந்த தீர்மானம் தொடர்பரக எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றி இவர் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸிடம் பேசவுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

## சுனாமி அலைகளின்.....

அதனைத் தொடர்ந்து குழந்தை யின் மரபணுப் பரிசோதனைக்கு உத்தர விட்ட நீதிமன்றம் குழந்தையை கல்முனை வைத்தியசாலையில் வைத்துப் பராமரிக்குமாறும் உத்தர விட்டிருந்தது. "குழந்தை வைத்திய சாலையில் இருந்த நாட்கள் அனைத்தும் நாங்களும் வைத்தியசாலையில் போய்ப் பார்த்து வந்தோம்.

மக்களுக்கும் நீதிக்கும் அக் குழந்தையை யாருடையது எனத் தீர்மானிக்கக் கால அவகாசம் தேவை யாக இருந்தது. ஆனால் எங்களுக்குத் தெரியும் அவன்தான் எங்களுடைய குழந்தை என்று........" எனப் பெற்றோர்கள் தெரிவித்தனர். இதன் பின்னர் "குழந்தை 81" எனப் பெயரிடப்பட்டுப் பிரபல்யமான அக்குழந்தை அமெரிக்கத் தொலைக் காட்சி சேவையில் காலை ஒலிபரப் பொன்றின் நேர்காணலுக்கும் சமூக மளித்துப் பிரபல்யமானது.

## „எத்தனைபேர் அழிந்தாலும் இலட்சியம் அழியாது"

"எத்தனை பேர் கொல்லப்பட்டாலும் எமது இலட்சியத்தை அழிக்க முடியாது" என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பி.அரியநேந்திரன் தெரிவித்தார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் எட்டாவது ஆண்டு நினைவு தின வைபவத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மட்டக்களப்பு சார்ள்ஸ் மண்டபத்தில் நேற்று நடைபெற்ற அவரின் நினைவு தின வைபவத்தில் தொடர்ந்துரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் பி.அரியநேந்திரன், "மா மனிதர் ஜாசப் பரராஜசிங்கத்தை படுகொலை செய்தாலும் அவரின் இலட்சியத்தையும், அவரின் கொள்கையையும் அழித்து விடமுடியாது" என்றார்.

"ஜோசப் பரராஜசிங்கம் என்றும் நினைவு கூறப்பட வேண்டியவர். மா மனிதர் ஜாசப் பரராஜசிங்கத்தை யார் படுகொலை செய்தார்கள் என்பது மக்களுக்கு நன்கு தெரியும். அவரை படுகொலை செய்தவர்களினால் அவரின் இலட்சியத்தை அழிக்க முடியவில்லை.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை செய்யப்பட்ட போது அவரின் வெற்றிடத்திற்கு சந்திர நேரு நியமிக்கப்பட்டார். ரவிராஜ் படுகொலை செய்யப்பட்ட போது சட்டத்தரணி சிறிகாந்தா நியமிக்கப்பட்டார். சிவநேசன் படுகொலை செய்யப்பட்ட போது சிறி நியமிக்கப்பட்டார்.

இவ்வாறு இவர்கள் கொலை செய்யட்ட போது இவர்களின் இலட்சியத்தை கொலை செய்தவர் களினால் அழித்து விடமுடியவில்லை. கொலையாளிகளின் நோக்கம் நிறைவேறவில்லை.

எத்தனை பேரை அழித்தாலும் வடக்கு கிழக்கு இணைந்த அரசியல் தீர்வுக்கான எமது பயணம் தொடர்ந்து கொண்டே இருக்கும்" என்றார்.

## தமிழர்கள் தம்மைத்.....

தெரிவித்துள்ளார். பொஸ்னிய சமாதானப் பேச்சு நடவடிக்கைகள் தொடர்பாக கனேடிய இனக்கருவறுப்பு ஆராய்ச்சி நிறுவனத்தில் நடைபெற்ற பேச்சுக்களில் ஈடுபட்டிருந்த பேராசிரியர் பொய்லியிடம் ஈழத்தமிழர்கள் தொடர்பாகக் கேட்கப்பட்ட கேள்வி யொன்றுக்கு பதிலளிக்கும் போதே இதனைத் தெரிவித்துள்ளார்.

## கடலில் கலக்கும்.........

கடல் பகுதிக்கு செல்லும் நீரை குளத்துக்கு திருப்பும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

திருகோணமலை ஹொரவ் பொத்தான பிரதான வீதியில் உள்ள பன்குளம் ஆற்றுப் பகுதியால் செல்லும் நீர் குச்சவெளி கடலுக்கு செல்வதாகவும் தங்களுக்கு விவசாயங்களை மேற் கொள்ள குளத்தில் தண்ணீர் இல்லா மையினால் விவசாயிகள் ஒன்றிணைந்து இப்பணிகளை செய்து வருவதாகவும் தொடர்ச்சியாக பதினொரு நாட்களாக இப் பணிகளை மேற்கொண்டு வருவதா கவும் தெரிவிக்கின்றனர்.

கிராம மக்கள் இந்த ஆற்றை மறிப்பதற்கு ஏழாயிரத்துக்கும் மேற்பட்ட பேக்குகளை வழங்கி உள்ளதாகவும் இக்குளத்துக்கு இவ்வருடம் மழை பெய்யாத காரணத்தினால் தண்ணீர் வரவில்லை எனவும் எமது தொழிலாக மேற்கொள்ளும் விவசாயத்தை தொடர்ச் சியாக செய்ய இந்த அணைக்கட்டு போடப்பட்டு வருவதாகவும் தெரிவிக் கின்றனர்.

எனவே மகிந்த சிந்தனை திட்டத்தின் கீழ் இவ் அணைக்கட்டினை கொங்ரீட் இட்டு சரிசெய்து தர வேண்டும் எனவும் விவசாய மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

## திருமலைக் கடற்..........

இப் பயிற்சியானது இலங்கைக் கடற்படையுடன் மாலைதீவு மற்றும் இந்தியக் கடற்படையினர் இணைந்து மேற்கொள்ளும் முன்நாட்டுப் பயிற் சியாக அமைந்துள்ளது. இப்பயிற்சிக் கென இரண்டு இந்தியக் கடற்படைக் கலங்கள் திருமலைத் துறைமுகத்தை கடந்த வாரம் வந்தடைந்ததும் குறிப்பிடத் தக்கது.

"தமிழ்நாட்டு மக்களின் உறுதியானதும் உணர்சிகரமானதுமான விருப்பங்களை எனது முன்னைய கடிதங்களின் ஊடாகவும், மக்களின் எதிர்ப்புக்களின் ஊடாகவும், மாநிலங்கள் அவையில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் ஊடாகவும் வெளிப்படுத்தி யிருந்த போதும் அவை எவற்றையும் கருத்திற்கொள்ளாது எடுக்கப்பட்ட தீர்மானமாகவே இக் கூட்டுப்படைப் பயிற்சியினைக் கருதுகின்றேன். திருகோண மலையில் நடைபெறும் இப்பயிற்சியை உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கின்றேன்" என அவரது கடிதம் தொடர்கின்றது.

## பால்மாவிற்குத் தட்டுப்பாடு... இறக்குமதி குறைவினால் அதிகரிக்குமா விலைகள்

உலக சந்தையில் அதிகரிக்கப்பட்டுள்ள பால் மாவின் விலைகளுக்கு நிகராக இலங்கை சந்தையில் தமது உற்பத்திகளை விற்பனை செய்ய முடியாத காரணத்தினால் இலங்கையில் பால்மா இறக்குமதி செய்யும் நிறுவனங்கள் தமது இறக்குமதியை குறைத்துள் ளமையே உள் நாட்டு சந்தையில் பால்மா வகைகளுக்கான தட்டுபாடு ஏற்பட்டுள்ளமைக்கு காரணமாகும் என்று நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

சந்தையில் நிலவும் பால்மா தட்டுப்பாடு நிலைமை தொடர்பாக நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் உயர் அதிகாரி ஒருவருடன் வினவிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

இன்று நாட்டின் சந்தைகளில் பால்மா வகைகளுக்கு பாரிய தட்டுப்பாடு காணப்படுகின்றது. இதற்கு பிரதான காரணமாக அமைவது நாட்டில் உள்ள முன்னணி நிறுவனங்கள் தமது இறக்குமதியினை குறைத்தமையாகும். காரணம் இன்று உலக சந்தையில் பால் மா வகைகளின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் இந்நிறுவனங்கள் உள்நாட்டில் பால் மா வகைகளின் விலையினை அதிகரிக்கக் கோரி தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்து வருகின்றன. எனினும் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையினால் அதற்கான அனுமதி வழங்கப்படவில்லை.

காரணம் உலக சந்தையில் பால்மா வகைகளின் விலைகள் தற்போது அதிகரித்திருந்த போதிலும் எதிர்வரும் சில காலங்களில் விலை குறைவடைவதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. இவ்வாறான நிலையில் உள்ளூட்டு சந்தையில் பால்மா வகைகளின் விலையினை தற்போது அதிகரித்தால் உலக சந்தையில் விலை வீழ்ச்சியடையும் போது எமக்கு விலையினை குறைக்க நடவடிக்கை எடுக்க முடியாமல் போய்விடும் என்றும் தெரிவித்தார்.

## திருமலையில் நெல்சன் மண்டேலா அவர்களின் நினைவு நாள் பிற்போடப்பட்டது



மலைமுரசு. நகர லியோ கழகம் மற்றும் "கூத்தாடிகள்" அமைப்பு ஆகியன இணைந்து திருகோணமலையில் மறைந்த பெருந் தலைவரும், சுதந்திரப் போராட்ட வீரருமான தென்னாபிரிக்க முன்னாள் சனாதிபதி மதிப்பிற்குரிய நெல்சன் மண்டேலா அவர்களின் நினைவு நாளைக் கடைப்பிடிக்கும் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளன.

இன்று 28ம் திகதி மாலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியின் இளையோர் பாடசாலை அரங்கில் நிகழ ஏற்பாடாகியிருந்த அந் நினைவு கூறல் சனவரி மாதம் 04ம் திகதிக்குப் பிற்போடப்பட்டுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

"தென்னாபிரிக்காவும் நிறவெறியும்", "மண்டேலா ஒரு குழந்தையாக – இளைஞனாக", "மண்டேலாவின் போர்", "மண்டேலா - உள்ளேயும் வெளியேயும்", தலைவர் மண்டேலா" ஆகிய தலைப்புக்களில் நினைவுச் சொற்பொழிவுகள் இடம்பெற ஏற்பாடாகியுள்ளன. அத்துடன் கவிதைகள், மண்டேலா தொடர்பான சலனப்பட தொகுப்புகள் (Videos) போன்றன காட்சிப்படுத்தப்படவும் உள்ளன. அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## பெண் உரிமை

தொடர்ச்சி..

இதை அல்குர்ஆன் அவன் உங்கள் யாவரையும் ஒரே ஆத்மாவிலிருந்து உற்பத்தி செய்தான் எனக் கூறுகிறது.

ஆண்களைப்போலவே பெண்களுக்கும் உயிர், உடமை மானம் போன்றவற்றையும் உரிமையையும், உத்தரவாதத்தையும் இஸ்லாம் வழங்கியுள்ளது. அவள் கண்ணியமானவள் அவளுக்கு மானம் உண்டு. அவள்மீது படுதூறு சொல்வதற்கு யாருக்கும் உரிமை கிடையாது. அவள்மீது படுதூறு சொன்னவர்கள் அதை நிரூபிக்க நான்கு சாட்சிகள் கொண்டு வராவிட்டால் கடும் தண்டனைக்கு ஆளாகுவார். பின்வரும் அல்குர்ஆன் வசனம் விளக்குகிறது.

"யாரேனும் கற்புள்ள பெண்கள் மீது அவதூறு கூறி அதற்கு வேண்டிய நான்கு சாட்சிகளைக் கொண்டு வராவிட்டால் அவனை நீங்கள் 80 கசையடி கொடுத்து தண்டியுங்கள் பின்னர் அவனது சாட்சியத்தை ஒரு போதும் ஏற்காதீர்கள்"

மேலும் நபியவர்கள் பெண்களின் மதிப்பையும் அந்தஸ்த்தையும் உயர்வு படுத்துவதற்காக தாய்மார்களின் பாதத்தின் கீழ் சுவர்க்கம் உள்ளது எனக் கூறினார்கள். மேலும் எவழ் தன் மனைவியிடத்தில் கண்ணியமாக நடந்து கொள்கிறாரோ அவரே உங்களில் சிறந்தவராவர் என்றும் நபியவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

மறுமையில் மனிதன் பெறுகின்ற உலக விசகாரங்களுக்கான நற்கூலி அல்லது தண்டனை இரண்டிலும் ஆண் பெண் இருபாலாரும் சமமானவர்களே இவ்விடத்தில் யாருக்கும்.விசேட சலுகை கிடையாது இதனை அல்குரான் தெளிவு படுத்துகி ன்றது.

''உங்களின் ஆண் பெண் இரு பாலாரிலும் யார் நன்மை செய்த போதிலும் நிச்சயமாக நாம் அதனை வீனாக்க மாட்டோம் உங்களில் ஒருவர் மற்றொருவரில் உள்ளவர்தான். ஆகவே கூலி கொடுப்பதில் பாகுபாடு இல்லை.

அவ்வாறே உழைக்கவும் சொத்துக்களை பெற்றுக் கொள்வதற்கும் அவற்றை நாம் விரும்பும்படி கையாளவும் ஆணுக்கும் பெண்ணுக்கும் சம உரிமையுண்டு. இதனை அர்குர்ஆன் "ஆண்களுக்கு அவர்கள் சம்பாதித்தவை அவர்களுக்குரியன அதே போல் பெண்களுக்கும் அவர்கள் சம்பாதித்தவை அவர்களுக்குரியன அதே போல் பெண்களுக்கும் அவர்கள் சம்பாதித்தவை அவர்களுக்குரியன் எனக் கூறுகிறது.

உண்மையான இஸ்லாமிய சமுதாயத்தில் பெண் தனது சட்டரீதியான உரிமைகளுக்கும் குடிசார் உரிமைகளுக்கும். மேலாக கௌரவமான அந்தஸ்தினை வகிப்பதுடன் விசேடமான மரியாதை காதல், பாசம் என்பவற்றுடன் அவளுக்கே உரிய மென்மையான உணர்வுகளையும் அனுபவிக்கிறாள். அவளே பாசமுள்ள தாயாகவும் நேசிக்கப்படும் மனைவியாகவும் அன்புள்ளங் கொண்ட மகளாகவும் விளங்குகிறாள்.

(தொடரும்)

## "உறவினர்களுடன் சேர்ந்து வாழ்தல்" நபி அவர்கள் கூறியதில் இருந்து

நிச்சயமாக அல்லாஹ் நீதி செலுத்து மாறும் நன்மை செய்யுமானும் உறவினர்களுக்குக் கொடுத்து ஆதரிக்குமாறும் கட்டளையிடுகிறான். மேலும் மானக்கேடானவை, வெறுக்கப்பட்டவை, அழிச்சாட்டியம், ஆகியவற்றை விட்டும் உங்களை விலக்குகிறான், நீங்கள் நினைவில் நிறுத்துவதற்காக அதனை உங்களுக்கு அவன் உபதேசிக்கிறான்.

சூரா அந்நஹ்லில் மூன்று கட்டளைகள் கூறப்படுகின்றன. 1. நீதிசெலுத்தும் படியும் 2. உபகாரம் செய்யும் படியும், 3. உறவினர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளும் படியும் கூறப்படுகின்றன.

மூன்று காரியங்கள் தடுக்கப்பட்டுள்ளது. 1 வெட்கமற்ற தன்மை 2. எல்லா வகையான தீயகாரியங்கள் 3. அநியாயம்.

மனிதன் நல்ல தன்மைகள் உள்ளவனாக மாறி மற்றவர்களுக்கும் நல்லதையே சொல்லிக் கொடுத்தல் வேண்டும்.

"தந்தை சுவர்க்க வாசலில் சிறந்த வாசல்" அவருக்கு மாறு செய்து அவரது மனதை புண்படுத்தி அவ்வாசலை அடைத்துவிடு அல்லது அவர்கு கீழ்படிந்து நடந்து அவரை திருப்திப்படுத்தி அவ்வாசலை பாதுகாத்துக் கொள். என நபி அவர்கள் கூறியிருந்தார் **(தொடரும்)**

**ஜாபிர் பஸ்னா**
**நொக்ஸ் வீதி**

## இத்தா ஏதற்கு

அளவற்ற அருளாலன் நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் ஆரம்பம் செய்கின்றேன்.

பரந்த பூமிமையும் விரிந்த கடலையும் விசாலமான வானத்தையும் படைத்து பரிபக்குவப்படுத்தும் வல்ல நாயசக்கே புகழ் அனைத்தும் (அல்ஹம்து லில்லாண்)

பேனா நியர்களுக்கும் பேனாக் குடும்பத்தினருக்கும் முதலில் எனது இதயம் கனிந்த ஸலாம் அஸ்ஸலாகு அலைக்கும்.

இன்று இத்தா பற்றி சற்று ஆராயலாம் என்று நினைக்கின்றேன். இத்தா என்றால் என்ன ஏன் எதற்கு யாருக்கு எவ்வள்வு காலம் என்று அநேகமான மாதர்களுக்கு புரியவில்லை ஆகவே பேனாவில் ஊடாக இதை எழுத வாய்ப்பு அளித்ததிற்கு முதலில் நன்றியை சொன்னவளாக ஆரம்பிக்கின்றேன்.

நம் வாழ்வில் நாளாந்தம் நடைறெும் நிகழ்ச்சிகள் பற்றிய அறிவு நமது சமூதாயத்தில் இல்லாமலிருப்பது உண்மை உதாரணமாக இத்தா எதற்காக என்ற அறிவு எமது சமூதாயத்தில் இல்லாமல் இருந்து வருகிறது. இத்தா எப்போது எப்படி எங்கு இருக்க வேண்டும் என்பது பற்றியும் அவ்வாறு இருக்கும் போது செய்ய வேண்டிய செய்யக் கூடாத கருமங்கள் பற்றியும் பல தவறான கருத்துக்கள் நம் சமூதாயத்தில் நிலவி வருகின்றன. இத்தா இருத்தல் அவசியம்தானா வேண்டுமா எவ்வளவு காலம் இருக்கலாம் என்பது பற்றி பலர் தம்மிஷ்டட்படி முடிவுகளை எடுத்து வருகின்றனர்.

ஒரு முஸ்லிம் எந்த ஒரு காரித்தையும் செய்து செய்யாமலிருப்பது ஒரே ஒரு காரணத்திற்காக என்று இருக்க வேண்டும். **(தொடரும்)**

## அழகுக் குறிப்புக்கள்




✸ செம்பருத்தி இலைகளை நன்கு அரைத்து அதனுடன் சிறிது தேங்காய் எண்ணையைச் சேர்க்க தலையில் தேய்த்து 15 நிமிடம் காயவிட்டு பின் குளிக்கவும். இவ்வாறு தொடர்ந்து செய்து வந்தால் முடி வலுப்படும்

✸ ஓலிவ் எண்ணையையும் எலுமிச்சை பழச்சாற்றையும் ஒன்றாக கலந்து தலையில் தடவி அரை மணி நேரம் காயவிட்டு குளிக்க வேண்டும். இவ்வாறு தொடர்ந்து செய்து வர பொடுகு தொல்லை குறையும்.

✸ கொத்தமல்லி இலைச்சாற்றை உதட்டில் தொடர்து பூசிவர உதட்டில் உள்ள கரும்புள்ளிகள் நீங்கும். முகத்தல் ஏற்படும் சுருக்கங்களுக்கு பச்சை உருளைக்கிழங்கினை நசுக்கி முகத்திலும் இரவில் தூங்கும் நேர தேய்த்து தூங்கச் சென்று காலையில் அகற்றவும் இவ்வாறு தொடர்ந்து செய்து வர முகச் சுருக்கங்கள் நீங்கும்.

✸ பேரீச்சம் பழத்தை அரைத்து முகத்தில் தடவி வந்தால் முகச்சுருக்கம் குறையும் நீண்ட நாட்களுக்குச் சுருக்கம் விழுவதைத் தள்ளி போடலாம்.

✸ பாலோடு சர்க்கரையும் கலந்து முகத்தில் பூசவும் சர்க்கரை கரையும் வரை தடவவும், குளிர்ந்த நிரில் கழுவலாம் முகம் புது பொலிவோடு.

✸ பழுத்த வாழைப்பழத்தோடு, சிறிது மஞ்சள் பொடி கடலைமாவு கலந்து முகத்தில் கழுத்திலும் தடவ வேண்டும். 15 நிமிடங்களுக்குப் பிறகு கழுவினால் முகம் நல்ல பளபளப்பைப் பெறும்.

✸ முகத்திலுள்ள நுண்ணிய துவாரங்களைப் போக்க முட்டையின் வென்கருவை அடிக்காமல் முகத்திலும் கழுத்துப் பகுதியிலும் தடவ வேண்டும். 10 நிமிடங்ளுக்குப் பிறகு கழுவினால் நல்ல பலன் தெரியும்.



## வெற்றிப் பெண்கள்

**மிகுந்த** பலத்துடன் பிறப்பவர்கள் தான் பெண்கள்!

பலம் என்பது உடல் பலம் அல்ல. மாறாக அவள் தாங்கிச் செல்லும் மன வலிமையை குறிக்கின்றது. ஒரு பெண்ணின் உண்மையான சக்தி அவளின் உள்ளார்ந்த ஆத்மாவில் கலந்திருக்கிறது. ஐம்பதாண்டு காலமாக பெண்கள் தங்கள் கால்களை பல்வேறு துறைகளில் பதித்துள்ளனர். வணிகம், அறிவியல், தொழில் நுட்பம், ஆசிரியர் ஆகிய பல பணிகளில் ஈடுபட்டுள்ளனர். இந்த பட்டியல் நீண்டு கொண்டே செல்கின்றது. பொதுவாக பெண்கள் முன்னேறுவது ஒரு எதிர்பார்த்த காரியமாகவோ அல்லது மகிழ்ச்சியை தரக்கூடிய காரியமாகவோ இருப்பதில்லை.

பெண்கள் எப்பேரப்பட்ட வாழ்விலும் தங்கள் கால்களை பதித்த வண்ணம் தான் உள்ளனர் என்று கூறினால் அது மிகையாகாது. அவளுக்கு மட்டும் எப்படி இவ்வளவு துணிச்சல்?

இந்த ஒரு விடயம் நமக்கு பிரம்மிப்பூட்டுபவதாக இருக்கும். ஆனால் அவளுக்குள் இருக்கும் ஒரு சக்தி அவளை இத்தகைய உயரத்தை அடையச் செய்கின்றது. வெற்றி என்பதை தான் நாம் அனைவரும் விரும்புகின்றோம். பெண்கள் மட்டும் ஒரு விதி விலக்கு அல்ல. ஆனால் வெற்றி எளிதாக வந்து விடாது. அதற்கு விடாமுயற்சியும் உறுதியுடனும் இருக்க வேண்டும். வெற்றிகரமானவராக இருப்பதால் பல்வேறு நன்மைகள் இருக்கின்றன. எனினும், வெற்றிகரமானவர்களாக இருப்பதில் கூட, பெண்களுக்கு பல பெண்களுக்கு தடைகளும் இறக்கங்களும் ஏற்படுகின்றன. பெண்கள் இதற்காக படும் அவலங்கள் பல உண்டு.

வெற்றி என்பது ரோஜா படுக்கை அல்ல. எந்த ஒரு செயலாக இருந்தாலும் பெண்கள் அதற்கு தேவையான முயற்சிகளை செய்ய அச்சப் படுவது கிடையாது. அவர்கள் சுயமாக மற்றும் சட்டென்று எதையும் செய்து விடுவார்கள். இவ்வாறு செய்வது அவர்களுக்கு மிகுந்த தொந்தரவை அளிக்கக் கூடும்.

எனினும், அவளது இடத்தை இந்த சமூதாயத்தில் தக்க வைத்துக்கொள்ள தேவையான முயற்சிகளை அவள் எடுத்துக் கொண்டே தான் இருப்பாள்.

வெற்றி பெறுவதற்காக பெண்கள் எடுக்கும் முயற்சிகளை நாம் கூறாமல் விட்டு விட முடியாது. அவள் பல வி'யங்களை விட்டு கொடுத்து தான் முன் நிலையில் நிற்கிறாள். பல பணிகள் செய்பவள் பெண்கள் இயற்கையாகவே பற்பல பணிகளில் ஒரே நேரத்தில் ஈடுபட்டிருப்பார்கள். இவ்வாறு பற்பல வேலைகளை செய்து கொண்டே, வெற்றிகரமான பெண்களாக இருப்பது ஒன்றும் எளிதான காரியம் இல்லை. இதற்கு அதிக அளவு உழைப்பும் கவனமும் தேவைப் படுகின்றது.......

**வெற்றிப் படிகள் தொடரும்....**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆழிப்பேரலையால் காவுகொள்ளப்பட்டவர்களுக்காய் உறவுகள் கண்ணீர் மல்க ஆத்மசாந்தி பூசைகள் மட்டக்களப்பு





கடந்த 2004 ஆம் ஆண்டு உலகின் பல நாடுகளிலும் ஆழிப்பேரலை உறவுகளை அள்ளிக்கொண்டு சென்றபோது உலகெங்கும் அழுகுரல் கேட்டு இன்று ஒன்பது ஆண்டுகள் கடந்த நிலையில் இலங்கையில் அதிகமான உறவுகளை காவுகொடுத்த மட்டக்களப்பின் கரையோர கிராமங்களாகிய நாவலடி, புதுமுகதுவரம், டச்பார், திருசெந்தூர் , கல்லடி ஆகிய பிரதேசங்களில் கடந்த 26.12.2013 ஆம் திகதி அனைத்து ஞாபகார்த்த தூபிகளிலும் ஆத்மசாந்தி பூசை நிகழ்வுகள் இடம்பெற்றபோது உறவுகள் கண்ணீர்மல்க அஞ்சலி செலுத்துவதை படங்களில் காணலாம்.





## கல்லடி புனித இஞ்ஞாசியார் ஆலய ஒளிவிழா நிகழ்வு



மட்டக்களப்பு மறை மாவட்டத்தின் பாதுகாவலரும் டச்பார் - கல்லடி பங்கின் பாதுகாவ லருமான புனித இஞ்ஞாசியார் ஆலயத்தில் பாலகனாம் கிறிஸ்து பெருமானின் பிறப்பினை கொண்டாடுமுகமாக ஏற்பாடுசெய்யப்பட்ட ஒளிவிழா நிகழ்வானது இன்று 21.12.2013ஆம் திகதி பங்குத் தந்தை அருட்பணி ஜீவராஜ் அடிகளார் தலைமையில் ஆலய வளாகத்தில் மிகவும் சிறப்புற நடைபெற்றுவருகின்றது.



இந் நிகழ்வினை சிறப்பிக்குமுகமாக பிரதம அதிதியாக பங்கின் முதல் குருவான அருட்பணி நோர்டன் ஜோன்சன் அடிகளார் கலந்து சிறப்பித்ததுடன் கௌரவ அதிதிகளாக மண்முனை வடக்கு பிரதேச செயலக காணி உத்தியோகத்தர் ந.இளம்செழியன், கிராம உத்தியோகத்தர் எஸ்.பாக்கியநேன் மற்றும் அருட்தந்தையர்களும், அருட்சகோ தரிகளும், நற்கருணைப் பணியாளர்களும் , பங்கு மக்களும் கலந்து சிறப்பித்தார்கள்.

சிறார்களினாலும் மறையாசிரியர்களினாலும் கலைநிகள்வுகள் அரங்கேற்றப்பட்டதுடன், சாதனைபடைத்த மாணவர்களுக்கு அதிதிகளால் பரிசில் களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

## நீரூர்த்தி ஏறி நபர் பலி

திருகோணமலை அநுராதபுர சந்தியில் அமைந்திருக்கும் Maga Engieering Private Ltd-ல் பணிபுரிந்து வந்த, வில்ஹம் விகாரை துவரங்காடு பகுதியில் வசிக்கும் திரு யு.து.சில்லா வயது(40) என்பவர் நீர்த்தாங்கி வாகனத்தில் அடிபட்டு மரணித்துள்ளார்.

வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அலுவலக நீர்த்தாங்கி வாகனத்தில் நீர் நிரப்பும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளையில் வாகன ஓட்டுனர் வாகனத்தை பின் நோக்கிச் செலுத்தியதால் மேல் இருந்த சில்வா தவறி கீழே விழ வாகனத்தின் பின்புறம் மோதியதால் சம்பவ இடத்திலேயே உயிர் இழந்ததாக சக ஊழியர்கள் தெரிவித்திருந்தனர்.






சம்மாந்துறை ப்ரில்லியன்ட் ஆங்கில பாலர் பாடசாலையின் 3வது ஆண்டு நிறைவினை முன்னிட்டு கலைவிழாவும், பரிசளிப்பும் கடந்த 23.12.2013 ம் திகதி முகாமைத்துவப் பணிப்பாளர் ஏ.எல். சர்ஜூன் தலைமையில் சம்மாந்றை அப்துல் மஜீட் மண்டபத்தில் நடைபெற்றது. பிரதம அதிதியாக சம்மாந்றை வலயக்கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். ஜலீல் அவர்களும் பல அதிதிகளும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## புல்மோட்டை பட்டிகுடா பிரதேசத்தில் கடற்படையினர் காணி அபகரிப்பு?

வெள்ளிக்கிழமை (2013.12.20) புல்மோட்டை பட்டிக்குடா பிரதேசத்திலுள்ள பொது மக்களுக்கு சொந்தமான காணிகளை உள்ளடக்கி கடற்படைக்கு சொந்தமான பகுதி என்று பெயர்ப்பலகை பட்டதுடன் அப்பிர தேசத்தில் தோட்டம் செய்த அங்கு வசித்து வந்தவர்களை அங்கிருந்து வெளியேற்றிவிட்டு அவர்கள் வசித்து வந்த கொட்டில்களை சிதைவடையச் செய்தது மட்டுமல்லாமல் தோட்டங்களை பாதுகாப்பதற்காக அடைக்கப்பட்டிருந்த வேலிகளையும் அகற்றியுள்ளனர்.

இவ்வாறான நடவடிக்கை மூலம் முற்றாக பயிர்கள் சேதமடைந்துள்ளது மட்டுமல்லாமல் பொது மக்கள் பதற்றமடைந்துள்ளனர்.

இதன் பின்னர் புல்மோட்டை கடற்படையினரின் முறைப் பாட்டிற கிணங்க குச்சவெளி உதவி பிரதேச செயலாளர் ,மாகாண காணி ஆணையாளர், வன ஜீவராசிகள் சரணாலய அதிகாரிகள், வன பரிபாலன அதிகாரகாரிகள், புல்மோட்டை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, கடற்படை உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம சேவையாளர் உள்ளிட்ட பலர் அங்கு விஜயம் செய்து அங்குள்ள நிலமைகள் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டது.

அதன்போது சம்பவ இடத்திற்கு விஜயம் செய்த அப்பிரதேசத்தை பிரதிநிதித்து வப்படுத்துகின்ற கிழக்கு மாகாண சபை உறுப்பினர் அன்வர் பட்டிக்குடா பிரதேச காணிகளின் நிலைமைகள் குறித்து தெளிவாக எடுத்துக் கூறிய அதேவேளை அங்கு கடந்த முப்பது வருட காலத்திற்கு முன்னர் மக்கள் அங்கு வசித்து வந்ததாகவும் அவர்கள் யுத்தத்தினால் இடம்பெயர்ந்து தற்போது தங்கள் சொந்த நிலங்களில் மீண்டும் சென்று துப்பரவு செய்து தோட்டங்கள் செய்து வருகின்ற சந்தர்ப்பத்திலேதான் இவ்வாறான நிகழ்வு இன்று இடம்பெற்றுள்ளது. அத்துடன் கடற்படை முகாம் அமைப்பதற்கு ஏற்கெனவே பொது மக்கள் தோட்டம் செய்து வந்தவர்களை வெளியேற்றிவிட்டு கடற்படையினருக்கு காணி வழங்கப்பட்டது. அதற்கு மேலதிகமாக 193 ஏக்கர் தேவை என பிரதேச செயலாளர் ஊடாக கிழக்கு மாகாண காணி பகிர்ந்தளிப்பு குழுவுக்கு விண்ணப்பம் செய்துள்ளனர் ஆனால் இதுவரை அதற்கான அனுமதி பெறப்படவில்லை.

இவ்வாறு அனுமதி பெறுவதற்கு முன்னர் அவர்கள் 500ஏக்கருக் மேற்பட்ட காணிகளைச்சுற்றி பெயர்ப்பலகையிடும் நடவடிக்கையே தற்போது செய்து வருகின்றனர் இதன் காரணமாகவே மக்கள் அச்சமடைந்துள்ளனர். ஆகவே ,தன் யதார்த நிலமையை சரியாக உணர்ந்து ,தற்கான தீர்வைப் பெற்றுத்தர வேண்டும் எனவும் தெரிவித்தார்.

பின்னர் உதவிக்காணி ஆணையாளரால் கடற்படைனரால் சேதமாக்கப்பட்ட கொட்டிலையும் பாதுகாப்பு வேலியினையும் 2013.12.25ம் திகதிக்கு முன்னர் அக்காணிக்குரியவரிடம் அகற்றுமாறு வேண்டப்பட்டுள்ளது. காணிக்குரியவர் ஏற்கெனவே காணி அனுமதிப் பத்திரத்துக்காக விண்ணப்பித்துள்ளார் என்பதுடன் அங்குள்ள மக்கள் தங்களது அன்றாட ஜீவனோபாயத்தை தோட்டங்கள் மற்றும் சிறுகடலை நம்பியவர்களாகவே காணப்படுகின்றர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org